DUPLICATE

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதிஞு (1889) ஆவணி மீ ௨௨ உ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**
யாழ்ப்பாணப்பட்டினம்: ஒருவ௫ஷத்திற்கு ரூ. ௨-௮0
வெளியூர், இந்தியா: " ரூ. ௪-௫0.
தொலைப்பகுதி: " ரூ. ௪-௫0
தனிப்பிரதி சதம் ௯.
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**
முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. ௬-௪0.
" அரைக்கலம் ரூ. ௫-00.
" காற்கலம் ரூ. ௩-௧௫.
" ஒருஅங்குலம் -௬௫.
அடுத்தமுறைகட்கு ஷ விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பணமனுப்பினலன்றி கவனிக்கப்படா.

புத்தகம் ௩௨. } யாழ்ப்பாணம்:—ரௌத்திரிஞு தைமீ ௱௪; ௧௯௨௧-ம்ஆ ஜனவரிமீ ௨௭௨. { இலக்கம்—௨௭

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிது லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப்பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சைதொழிலென்றோது
மதம்பூத்த விநாயகன்றன் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

### சாலாமிஸ்ரி லேகியம்.

I.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீருள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, குன்மவாய்வு, இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும்பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைறாத்தலுக்கு ரூபா ௧0. கால் றாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல. 91 முதல் மருதானை, கொழும்பு.

### புதிய கையோப்ப நேயர்கள்.

எமது பத்திரிகைக்குப் புதிய கையோப்ப நேயர்களாகச் சேர விரும்புவோர் ஒருவருடப் பத்திரக்கிரயத்தை முற்பணமாக அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம்,
"இந்துசாதன" மானேசர்.

### புத்தக விளம்பரம்.

யாழ்ப்பாணம்
**சைவபரிபாலனசபையாராற்**
**பிரசுரஞ்செய்யப்பெற்றன.**


| | ரூ. ச. |
|---|---|
| முதற் பாலபாடம் [சித்திரசகிதமானது] | ௧0 |
| இரண்டாம் பாலபாடம் (சித்திரசகிதமானது) | ௧௫ |
| மூன்றாம் பாலபாடம் ... ... ... ... | ௨0 |
| நான்காம் பாலபாடம் ... ... ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... ... ... ... | ௪0 |
| ஆறாம் பாலபாடம் ... ... ... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி [விளக்கத்துடன்] (இது எட்டாம் வகுப்பிலும், "ஆங்கிலஸ்கூல் லீவிங்சேர்ட்டிவிக்கற்" வகுப்பிலும் பயிலும் மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும் வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது)... ... ... | ௭௫ |
| லாமஞ்சரிவிளக்கம் (மாத்திரம்) ... ... ... | ௩0 |
| ஆத்திசூடி கொன்றைவேந்தன், உரையுடன் | ௬ |
| நமச்சிவாயமாலை, உரையுடன் ... ... ... | ௬ |
| வெற்றிவேற்கையுரை ... ... ... ... | ௬ |
| வாக்குண்டாமுரை ... ... ... ... ... | ௬ |
| நல்வழியுரை ... ... ... ... ... | ௬ |
| நன்னெறியுரை ... ... ... ... ... | ௬ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழி பெயர்ப்புடன்) | ௧௨ |
| இலக்கண வினவிடை... ... ... ... | ௧0 |
| நிகண்டு ௧௧-வதும ௧௨-வதும் ... ... ... | ௨௫ |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... ... | ௨௫ |
| திருட்டினன்றூது மூலமுமுரையும்... ... | ௫0 |
| திருச்செந்தூர்ப்புராணவுரை (கிளேஸ்காகிதம்) ரூ. ௧-௨௫, (தல்காகிதம்) | ௧-00 |
| [illegible] | ௧0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம ... ... ... ... | ௩ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... ... | ௧0 |
| பிள்ளையார்கதை ... ... ... ... ... | ௧௨ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... ... | ௧0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... | ௧0 |
| சாவித்திரி சரித்திரம் (புதியபதிப்பு) ... | ௬ |
| குமணசரித்திரம் " ... ... | ௬ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... ... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம் ... ... ... | ௧0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ... ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது எட்டுப்பிரதியின்படி அச்சிடப்பெற்றது ... | ௧௫ |

☞ இவைகள் இந்துசாதன ஆபீசிற் பெறற்பாலன. ஒரே இனத்திற் பத்துப் புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் கழிவு கொடுக்கப்படும். தொகையாக வாங்குபவர்கட்குத் தகுந்தகழிவு கொடுக்கப்படும். சபையாரது பாலபாடங்களையே எல்லா வகுப்புகளிலு முபயோகிக்குஞ் சைவவித்தியாசாலைகட்கு இந்துசாதனப் பத்திரிகை கிரயமின்றிக் கொடுக்கப்படும்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

### இரவில் மணி பார்க்கும்
### 8 மூலை ரேடியம்
## ரிஸ்லெட் கெடியாரம்.

8 மூலை கிளாஸ்
ரிஸ்லெட் ரேடியம்
கெடியாரம் 1-க்கு
ரூபா 7 8 0.



மூலை இல்லாத
ரவுண்டு ரிஸ்லெட்
கெடியாரம் 1-க்கு
ரூபா 6 8 0.

செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்பமுடியாது.

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,
பார்க்டவுன் போஸ்டு,
மதராஸ்.

(Y. 2)

### சமரச போதினி.

இஃதொரு தமிழ் வாரப் பத்திரிகை. தஞ்சைமா நகரினின்றும் பிரதி புதன்கிழமைதோறும் வெளிவருகிறது. தமிழ் ஜில்லாக்களில் எங்கும் சுதந்தர தாகத்தை எழுப்பிச் சீக்கிரம் இந்தியர்கள் பூரண சுய ஆட்சி பெறுவதற்கு நியாயக் கிளர்ச்சி செய்வதே இதன் முக்கிய நோக்கம் இந்தியர்களுடைய சுதந்தரத்தைப் பாதுகாப்பது இதன் முதல் விரதம். கிராமவாசிகளின் குறைகளை நீக்கிக் கிராமத்தைச் சீர்திருத்தும்படி செய்வதும் அதற்கு வழிகளைக் காண்பிப்பதும் இதன் வேலை. இப்பத்திரிகையில் யாவராயிருந்தாலும் நியாயம் தவறியும் இந்தியர்களுடைய லட்சியத்திற்கு விரோதமாகவும் போவார்கள் இடை நிலையினின்று ஈவு இரக்கமின்றிக் கண்டிக்கப்படுவார்கள். வகுப்பு, ஜாதி, மதம் முதலிய பேதங்களைக் குறைத்து இந்திய சனசமூகத்தை நிர்மாணிப்பது இப்பத்திரிகையின் லட்சியம். இதற்கு வருஷ சந்தா தபால்கூலி யுள்பட ரூபா ஐந்து ஆறுமாசத்திற்கு ரூபா மூன்று. வெளிநாடுகளுக்கு ரூபாஏழு, தேசமுன்னேற்றத்திற் கவசியமான எல்லா விஷயங்களும் தெளிவாகவும் தைரியமாகவும் எழுதப்படும். மாதிரிப்பத்திரம் அனுப்பப்படும்.

இ. சூரிய நாராயண ஐயர் பி. ஏ; பி. எல்;
பத்திராதிபர்,
"சமரசபோதினி" தஞ்சாவூர்.

சகலவிதமான அச்சுவேலைகளும்
மிக அழகாகவும்
வெகு விரைவாகவும்
செய்துகொடுக்கப்படும்.

சைவப்பிரகாசயந்திரசாலை
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

### உலகப்பிரசித்திபெற்ற
### சாஹேபியா மருந்துச்சாலை.

குணத்தி லுயர்ந்தது, விலை நயமானது.
உண்மைக்கோர் அத்தாக்ஷி
உலகின் பெருங்காக்ஷி.

### காமரஞ்சித சிட்டுக்குருவிச்சத்தின் லேகியம்.

உத்தரவாதமுள்ள சத்திய மருந்து.

இந்த அருமையான லேகியத்தைப்பற்றி நாம் அதிகம் புகழத்தேவையில்லை. அனுபவிப்பவர்கள் நன்கு அறிவார்கள். இது மகான்கள் செய்துவந்த முறையை அனுசரித்து அநேக வித்துகளாலும் மிசிரித் தினிசுகளாலும் பூ கையுருக்களுடன் தங்கரேக் வெள்ளிரேக்குகளும் கலந்து நல்ல பாகத்துடன் தயார்செய்துள்ள இதன் குணங்களாவன: தாய்வயிற்றிலிருந்து உற்பத்தியான வியாதியல்லாத மற்றெல்லாம் ஆண்டவனருளால் சுகப்படுமென்று நாம் திண்ணமாய்ச் சொல்லுகிறோம். வாலிபதசையில் கெட்டுப்போன தாதுவை உற்பத்தியாக்கி மூளைக்கும் நரம்புகளுக்கும் வலுவையேற்றி சீரணசக்தியையும் மனவுல்லாசத்தையும் சரீரபுஷ்டியையும் தந்து எந்தக்காலத்திலேயும் சந்தோஷத்தைத் தரக்கூடியது. இந்த லேகியம் பக்குவப்படி எந்தக் கம்பனியாரும் செய்யமாட்டார்களென்று நிச்சயமாய்ச் சொல்லுகிறோம்.

இதன் விலை.

| | | |
|---|---|---|
| 40 நாள் 80 வேளை மருந்து டப்பி 1-க்கு | ரூ. | 10—0—0 |
| 20 நாள் 40 வேளை | " | 5—4—0 |
| 10 நாள் 20 வேளை | " | 2—12—0 |

பாக்கிங் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

தேவையானவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் விளம்பர நோட்டீசுகளுக்குக் கிரயமில்லாமலும் போஸ்த் செலவு இல்லாமலும் இனாமாக அனுப்பப்படும். உடனே நோட்டீசுகளுக்கு எழுதுங்கள்.

நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்.

அ. அ. சாஹேப்,
சாஹேபியா மருந்துச்சாலை
பறங்கிப்பேட்டை,
தென்னார்க்காடு ஜில்லா.

(M. 3.)

## யாழ்ப்பாணம் உணவுப்பொருள் விருத்திச்சங்கம்.
### THE JAFFNA FOOD PRODUCTS Coy. Ltd.

இச்சங்கத்தின் முதல் ஒருலட்சம் (100000) ரூபா.
இம்முதற்பணம் ஒருபங்குக்குப்
பத்துரூபா விகிதம் 10000-பங்குகளாகப் பிரித்துச் சேர்க்கப்படும்.

இரணைமடுக் குளத்தினால் நீர்ப்பாய்ச்சிக் கமஞ்செய்து நெல் முதலிய உணவுப் பொருட்களை விருத்திசெய்வதும், நல்ல பால் மாடுகளை வளர்த்து சுத்தமான பால், நெய் முதலியவற்றை யாழ்ப்பாணத்தி லுள்ளவர்கட்கு உதவுதலும், நெல், வரகு, குரக்கன் முதலிய உணவுப்பொருட்களையும் மற்றும் பொருட்களையும் பிறதேசத்திலிருந்து தருவித்து வியாபாரஞ் செய்தலுமே இச் சங்கத்தின் விசேஷ நோக்கமாகும்.

சங்கத்திற் சேர்வோர் எத்தனைபங்கு வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம். ஆரம்பத்தில் 1-பங்கிற்கு 4-ரூபா விகிதம் யாழ்ப்பாணம் வியாபார சமுதாய (Jaffna Commercial Corporation) வங்கியில் பணம் குறித்த சங்கத்தின் பேரிற் கட்டுதல் வேண்டும்.

பங்குகள் வாங்க விரும்புவோர் 1921-ம் ஆண்டு மார்ஜ் மாசம் 1 ந் திகதிக்குமுன் பணங்கட்டுதல் வேண்டும்.

இச்சங்கத்தின் விபரங்களும் பிரமாணங்களும் அடங்கிய பத்திரமும் இச்சங்கத்திற் சேர்வோருக்கு வேண்டிய விண்ணப்பப் பத்திரமும் எவ்விடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

காரியதரிசி,
யாழ்ப்பாணம் உணவுப்பொருள்விருத்திச் சங்கம்
வண்ணார்பண்ணை.

(Mis. 60.)

## ஜவுளி விளம்பரம்.

—*0*—

குறைந்தவிலை! "பாந்ததினுசுகள்" சிறந்தஜவுளி!

நம்மிடம் நம் நேர்ப்பார்வையில் தயாரிக்கப்பட்டனவும், பிற ஊர்களிலிருந்து வரவழைக்கப்பட்டனவுமான நாகரீக நயம் ஜவுளிகள் யாவும் விலை சரஸமாகக்கிடைக்கும் தோட்டத்துக்கூலிகள், கங்காணிகள் முதலிய யாவரும் வீ. பி. மூலமாயும், பாங்குகள் மூலமாயும் சரக்குகளை வரவழைத்துக்கொள்ளலாம். தேவைக்கு உடனே எழுதுங்கள்.

இனும்! கேட்லாக் இனும்!

விஸ்வாலாக்ஷி அன்கோ,
லெட்சுமிபுரம் 8-வது தெரு,
மதுரை, (தென்இந்தியா.)

(Mis. 64.)

### திருபநேயர்களுக்கு அறிக்கை.

1. வரி நெருக்கம் இன்றி ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதவேண்டும்.
2. கடிதரின் பெயரும் விலாசமும் விபரமாயிருத்தல் வேண்டும்.
3. அனாமதேய சங்கதிகள் பத்திரிகையில் ஒருபோதும் இடம்பெறா.
4. இடம்பெறாத கடிதங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா.
5. கடிதர்களின் நிருபங்களைத் தொகுப்பதும் பகுப்பதும் பிரசுரிப்பதும் பிரசுரியாது விடுப்பதும் பத்திராதிபரின் இஷ்டத்தைப் பொறுத்தன.

## மெடிக்கல் டிப்பாட்மெண்டைச் சேர்ந்த ஒப்பந்தங்கள்.

(G. 68)

பொறநோயிலிருக்கும் பெண்களின் ஆசுப்பத்திரிக்கும் பொலிசு ஆசுப்பத்திரிக்கும், மாங்தோட்டை ஆசுப்பத்திரிக்கும், தேவையான இன்சாமான்களைக் கொடுக்க ஒப்பந்தம் பண்ணவிரும்புவோர் கேள்விக்கடுதாசிகளனுப்பலாம். ஒப்பந்தம் நிசழுங்காலம் கேள்விக்கடுதாசி ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் 1922-ம் ஆ௵ புரட்டாசி௴ 30-௳ வரைக்கும்.

பிரதான சிவில் மெடிக்கலாபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பாம் கடுதாசியிலே கேள்விகள் எழுதப்பட்டிருக்கவேண்டும். கேள்விக்கடுதாசிகள் ஒப்பந்த விசாரணைத்தலைவரின் கந்தோருக்கு 1921-ம் ஆ௵ மாசி௴ 1-௳ மத்தியானம் 12 மணிக்குமுன் அனுப்பப்படவேண்டும். நேரத்துக்குப் பின் வந்த கேள்விக்கடுதாசி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மற்றும் விளம்பரங்களுக்குப் பிரதான சிவில் மெடிக்கலாபீசரிடமெழுதிக் கேட்கவும். அல்லது அரசாட்சியாரின் காற் பத்திரிகையைப் பார்க்கவும்.

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:-ஜனவரி௴ 26௳ அ-க்வ.

## செய்வதென்ன?

தக்க ஆடவனொருவன் ; இல்லறத்திற் பிரவேசிக்க விரும்பித் தன்னோக்கத்தைப் பிறருக்குவெளியிட்டான். இதற்கிடையில் இரு கன்னியர்கள் தாமாக முற்பட்டு அந்த ஆடவனிடஞ் சென்று தனித்தனி "என்னை விவாகஞ்செய்துகொள், என்னை விவாகஞ்செய்துகொள்" என்று அவனை நெருக்கத் தொடங்கினார்கள். இரு கன்னியரிடத்திலும் இல்லறத்தை நடத்துதற்குரிய பல குணங்களுண்டு; மற்றும் அழகு முதலியவற்றிலும் இருவரும் குறைந்தவரல்லர். இருவருள் ஒருத்தியிடத்தில் ஒரு நற்குணமிருந்தால் மற்றவளிடத்தில் இன்னொரு நற்குணங் காணத்தக்கதாகவிருக்கும். இங்ஙனமிருந்தால் இந்த ஆடவன் செய்வதென்ன? ஆரை மணஞ்செய்துகொள்வது? ஒருத்தியை இவன் ஏற்க நினைத்தால் மற்றவள் மனம் வருந்துவாள். இருவரையும் மணஞ்செய்துகொள்ளலாமோவென்றாற் பிரமாணம் இடங்கொடாது. கன்னியர்கள்—அதன்றியும் தக்கவர்கள்—தாமாக முற்பட்டு இரந்துநிற்கும்போது ஒருத்தியை அங்கீகாரஞ்செய்து மற்றவளை அலட்சியஞ் செய்வதென்றால் அது மனத்திற்கு வேதனையாகும். குறித்த ஆடவன் இருவர் மனசையும் புண்படுத்தப் பிரியமில்லாதவனுய்த் தான் இப்பொழுது விவாகஞ் செய்யப்போவதில்லை யென்கின்றான். ஆனால் இவன் நெடுங்காலம் பிரமசாரியாயிருந்து இப்பொழுதுதான் விவாகஞ் செய்ய நினைத்தவன். பாபம், நினைத்தும் காரியங் கைகூடுவதற்கு இவ்விதமான இடையூறு உண்டாய்விட்டது. "ஏன் இவன் இவ்விருவரையும் விடுத்து வேறொருத்தியைமணம்புரியலாமே." என்றால் இவனுக்கு அவ்வாறு செய்தற்கு மனத்தைரியமில்லை. இந்தக் கன்னியர்கள் இருவரும் தாமாக அவனையடைந்து தனித்தனி தம்மை விவாகஞ்செய்துகொள்ளும்படி கேட்டிராவிட்டால் இவனுக்கு இத்துணைச் சங்கடம் ஏற்பட்டிராது. இவர்களுளொருத்தியையே இவன் மணஞ் செய்தலுங் கூடும். இவர்களாக முற்பட்டமையே எடுத்த கருமத்திற்குத் தடையாயிருந்தது.

இந்த ஆடவனுடைய நிலையிலேயே வடமாகாண வாசிகளாகிய நாங்களும் இப்பொழுது நிற்கின்றேம். பிரதிநிதியொருவரைத் தெரிவுசெய்தனுப்புஞ் சுதந்தரங் கிடைத்ததே, யாரைத் தெரிவுசெய்தனுப்பவேண்டுமென நாம் யோசித்தற்கிடையில், இருவர் "என்னைத் தெரியுங்கள், என்னைத் தெரியுங்கள்" என்று தனித்தனி முன்வரத் தலைப்பட்டனர். இருவரிடத்தும் சிற்சில, அன்றேற் பற்பல தகைமைகளுண்டு. ஆனால் இருவருள் ஒருவரைத் தெரிந்துகொண்டால் மற்றவர் மனஸ்தாபமுறுவர். இருவரையும் தெரிந்தனுப்பவென்றால் பிரமாணமிடங் கொடாது. இருவரையும் விடுத்து இன்னொருவரைத் தெரிவுசெய்தற்கு நமக்கு அபிமானம் போதாது; துணிவுமில்லை. முகத்திற்கஞ்சித் தகாதன செய்வதையே நாம் பழகிக்கொண்டோமன்றித் தேச நன்மையின்பொருட்டுழைத்தலை நமது தாய்த் தேசத்தவர்களாகிய இந்தியரைப் பின்பற்றியேனும் நாம் பழகிக்கொள்ளவில்லை. இந்த இருவருள் ஒருவரை இம்முறை முற்பட்டு நிற்கவேண்டாமெனச் சொல்லி மற்றவரை மாத்திரந் தெரிவு செய்தனுப்பவென்றாலோ நம்மிடத்து ஐக்கியமில்லை. பின் என்னசெய்கின்றேம்? இருவரையும் பிரியப்படுத்த நினைந்து ஒருவரைநோக்கி "உமக்கு இந்தவிஷயத்திலே துணைச்செய்கின்றேம், எங்கள் சம்மதியைமாத்திரம் மற்றவருக்குக் கொடுக்கின்றேம்" என்கின்றார் சிலர். நாம் ஒருவருக்குஞ் சம்மதி கொடுக்காமலிருந்துவிடுவதே நல்லதென்கின்றார் வேறுசிலர். இப்பொழுது நாம் ஒருவருக்கு விரோதமாகவும் மற்றவருக்குச் சார்பாகவும் பேசவொண்ணுது. அந்தச் சமயத்திற் பார்த்துக்கொள்வோம் என்கின்றார் இன்னுஞ் சிலர். ஆனால் நம்மவர்கள் இப்படி நிலை தடுமாறுதற்குக் காரணமென்ன வென்பதையும் நாம் ஆராயாமலிருக்கவில்லை. சனங்களாக ஒருவரைத் தெரிவு செய்தனுப்புதற்கு விடாமல் இருவர் தனித்தனி தம்மைத் தெரிவுசெய்தனுப்புங்களெனத் தாமாக முற்பட்டு நின்றமையே இதற்குக் காரணம். இப்படி இருப்பதினுற் செய்வதென்ன?

## இந்து வாலிபர் சங்கம்.

இவ்விலங்கையில் இப்பொழுது ஊர்கடோறும் இந்துவாலிபர் சங்கங்களிருக்கின்றன. இச்சங்கங்கட்கெல்லாந் தாய்போல் விளங்குவது யாழ்ப்பாணம் மத்திய இந்து வாலிபர் சங்கமாகும். கிறீஸ்து மதத்தர் சிலர் கிறீஸ்த வாலிபர் சங்கத்தைப் பின்பற்றியே இந்துக்களும் இந்து வாலிபர் சங்கங்களை ஆரம்பித்தனர், ஆனமையினுல் இந்த விஷயத்தில் சைவர்கள் தமக்குக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்கின்றார்கள். சைவருட் சிலர் அங்ஙனமன்று, எங்கள் முன்னோரும் இதுபோன்ற சங்கங்களை முற்காலத்திலே ஆரம்பித்து நடத்திவந்தனர்; அவர்களைப் பின்பற்றியே நாம் இந்து வாலிபர் சங்கங்களை ஸ்தாபிக்கத் தொடங்கினேம். இவ்விஷயமாக அந்நிய சமயத்தினருக்கு யாம் ஒருவாற்றானுங் கடமைப்படவில்லை யென்கின்றனர். "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்ற பிரகாரம் அந்நியரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு விஷயமானுலும் அவ்விஷயத்தில் நன்மையிருந்தால் அந்நன்மையான முறையைப் பின்பற்றி அனுசரிப்பதனுல் வரும் இழுக்கு யாதுமில்லையாகும். அன்றியும் பிறப்பைப் பற்றி யாம் வாதாடிக்கொண்டு நிற்பது மதியீனமாகும். ஏனென்றால் "சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது திருமுடியின் மீதிருக்கும்".

நமது சைவசமயம் ஊர்கடோறுமுள்ள இந்து வாலிபர் சங்கங்கள் வாயிலாகச் சிலவருட காலமாகப் பெரும் நன்மைகளை அடைந்து வருகின்றது. விசேஷமாக, கொழும்பு கண்டி மாத்தளை நாவலப்பிட்டி முதலிய பிறவிடங்களில் இருக்கின்ற சங்கங்கள் வாயிலாக, சைவ சமய அபிமானமும் சாதியபிமானம் பாஷையபிமானம் தேசாபிமானமென்னு மிவைகளும் ஐக்கியமும் வர வர விருத்தியாகின்றன. இவ்விடங்களில் உத்தியோகார்த்தமாயேனும் வியாபாரம் முதலிய மற்றும் நிமித்தமாகவேனும் சென்று குறித்த இடங்களையே தமக்கு வாசஸ்தானமாகக் கொண்டு வாழும் சைவர்களுக்கிடையிற் பேரபிமானமும் ஐக்கியமும் விளங்குவதை நாம் பிரத்தியக்சமாகப் பார்த்துள்ளேம். இச்சங்கங்கள் வாயிலாக இத்துணை நன்மைகள் விளைகின்றனவென்பதை அறியும்போது அது சைவ சமயத்தவர்களாகிய எங்கட்கெல்லாம் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. ஆனால் நாம் இவ்வளவுடன் அமையாது இவை வாயிலாக இன்னும் பல நன்மைகளைச் செய்ய முயலல் வேண்டும். நூற்றுக்கணக்கான வருடங்களாக அந்நிய அரசாங்கத்தார் கைப்பட்டிருந்தமை காரணமாக வலிகுன்றிய நமது சமயாசாரம் சாதியாசாரம் தேசாசாரங்களையும் பாஷையையும் சிலர்மாத்திரம் பிரவேசித்துச் சில வருடங்களாக உழைத்து வருவதனுல் அவற்றின் புராதன நிலைக்குக் கொண்டுவருதல் கூடுமென்பது அசாத்தியம். இச்சங்கங்கள் பேரளவில் வாலிபர் சங்கமென்றிருந்தாலும், வாலிபர்களால் நடாத்தப்பட்டு வந்தாலும், எங்கள் முதியோர்களாக வுள்ளவர்களும் இச்சங்கங்களிற் சேர்ந்து வாலிபருடன் ஒத்துழைத்தல் வேண்டும். உழைப்பது வாலிபராகவும் புத்தி சொல்வதும் உதவி புரிவதும் அனுபவத்தால் மிக்க முதியோராகவும் இருத்தல் வேண்டும். விசேஷமாகப் பிறவூர்வாசஞ் செய்யுஞ் சைவர்கள் எக்கருமமாக அங்கங்கு வாழ்பவராயினும் அவர்களெல்லாரும் அவ்வவ்வூர்களிலுள்ள இந்துவாலிபர் சங்கத்தின் அங்கத்தவர்களாகச் சேருதல் வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள மத்திய சங்கத்திற்கும் மற்றுமிடங்களிலுள்ள சங்கத்திற்கும் சம்பந்தமிருத்தல் நன்றும். மத்திய சங்கத்தார் சைவப்பிரசாரகர் ஒருவரிருவரை நியமித்து, அப்பிரசாரகர் ஊர்தோறுமுள்ள சங்கங்களிற் சென்று காலத்திற்குக் காலம் பிரசங்கஞ் செய்தற்கான ஏற்பாட்டை ஒழுங்கு செய்தல் வேண்டும். பிரசாரகருக்கான வேதனத்தையும் பிரயாணச் செலவு முதலியவற்றையும் சகல இந்து வாலிபர் சங்கத்தாரும் திரட்டிய நிதி கொண்டு உதவுதல் வேண்டும். பெருந்தொகையான நிதியொன்று இச்சங்கங்களின்பேரால் வங்கியிலேனும் நம்பிக்கையுள்ள வேறு எந்த இடத்திலேனும் இடப்பட்டிருத்தல் வேண்டும். ஏனென்றால் பணமின்றி எக்காலத்தும் எக்கருமமும் முற்றுப்பெறு. வருடந்தோறும் மத்தியசங்கத்தாரே சமயபாடங்களை நிர்ணயஞ்செய்து மற்றுஞ் சங்கத்தார்கட்கு அனுப்ப அவர்கள் சைவ மாணவர்கட்கு அவற்றைப் படிப்பிக்க, பின்னர் மத்திய சங்கத்தாரே அவற்றைத் தக்கவர்களைக்கொண்டு பரீட்சிப்பித்து, சித்தியடைந்த பிள்ளைகட்கு உபகாரங் கொடுத்தல் வேண்டும். வருடந்தோறும் இந்துமாணவர் மகாஜன சங்கம் கிறிமஸ்லீவிலே, மழைகாலமாகிய மார்கழி மாசத்திற் கூடுவதையொழித்து ஏப்பிறில் மாசத்தில் ஈஸ்டர் விடுதலைநாட்களில் கூடுவதற்கான ஒழுங்கு செய்தல் வேண்டும். அங்ஙனங் கூடுஞ்சமையத்தில் மற்றுஞ் சங்கங்களிலிருந்தும் பிரதிநிதிகள் அனுப்பப்படல் வேண்டும். இவற்றையெல்லாம் சிந்தித் தொழுகின் இச்சங்கங்களால் இன்னும் பற்பலநன்மைகளெய்துமென்பது எமதபிப்பிராயம்.

## அரிசி நெல் விலை.

"மழைவிட்டும் தூவானம் மாறவில்லை" யென்றாற்போல் அரிசிவிலைக் கட்டுப்பாடு நீங்கியும் சனங்கட்கு அதனுல் நேர்ந்த கஷ்டம் இன்னும் நீங்கியபாடில்லையாகும். அரசினருடைய கட்டுப்பாடு நீங்கி வியாபாரிமார் கையில் அரிசிநெல் வியாபாரம் வந்துவிட்டால் அதனுற் சகாயமுண்டாகுமென ஏழைச்சனங்கள் நம்பியிருந்தார்கள். அந்த நேரத்தில் வியாபாரிமாரும் அரிசிநெல் வியாபாரம் தமது பொறுப்பில் வந்துவிட்டால் தாங்கள் பெருஞ் சகாயஞ்செய்வோமென வாய்ப்பறை யறைந்து திரிந்தார்கள். சனங்களும் அதனை மெய்யென்று நம்பியிருந்தார்கள். ஆனால் வியாபாரிமார் சொன்னதொன்று செய்வது பிறிதொன்றுகவிருக்கின்றது. கட்டுப்பாடு நீங்கிய சில தினத்தில் மாத்திரம் விலை குறைய விற்றுவிட்டு இப்பொழுது தம்மனத்தி லெழுந்தபடி விலையை நாளுக்குநாள் உயர்த்திக்கொண்டு வருகின்றார்கள். ஒருபடி அரிசி இத்தனை சதந்தானென்று நம்பிச் சனங்கள் கடைக்குக் காசுகொண்டுபோக முடியாமலிருக்கின்றது. வியாபாரிமாருக்கு இவ்விதமான விபரீதபுத்தி யேற்படலாமா? அரிசிநெற் பஞ்சகாலத்தில் இவர்களும் மற்றவர்கள்போலச் சங்கடப் பட்டவர்தாமே. புதுப்பணம்படைத்தவரறிவரோ போனவருஷம் பட்டபாட்டை யென்றபடி இவர்கள் போனவருஷத்திற் பட்டபாட்டை இத்துணைச் சீக்கிரத்தில் மறந்துவிடலாமா? சென்றவருடத்தில் தவித்த முயலடித்த கமக்காரர்களின் வயல் இவ்வருடம் எவ்வாறு விளைந்திருக்கின்றதென்பதை இந்த வியாபாரிமாருஞ் சிந்திக்கவேண்டும். வியாபாரிமார் அரிசிநெல் விலையைக் கண்டபடி கூட்டி விற்பரேல் சனங்கள் அரசினருக்கு மனுப்பண்ணுவார்களென்பதையும் அரசினரும் அதனைக் கவனிப்பார்களென்பதையும் நன்கு அறிந்துகொள்ளக்கடவர். நேற்று கட்டரிசி புஷலொன்று 8 ரூபாவாகவும், சேரொன்று 33 சதமாகவும், பச்சையரிசி புஷலொன்று 10 ரூபாவாகவும், சேரொன்று 44 சதமாகவும் விலைப்பட்டன. இன்று ஒருமூடை கட்டரிசி 20 ரூபாவென அறிகின்றேம். நாளை எவ்வாறு விற்பார்களோ அறியேம்.

## சமாச்சாரம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி:—இக் கல்லூரி தைப்பொங்கல் விடுதலை நாட்களின் பின் நேற்று ஆரம்பித்திருக்கின்றது.

சட்டநிருபண சபைக் கூட்டம்:—நிகழும் ஜனவரி௴ 26௳ இச்சபையின் கூட்டமொன்று கொழும்பிற் கூடப்படும்.

பெருமழை:—முன்னொருகாலத்தும் பெய்திராத பெருமழை இவ் வருடத்திற் பெய்கின்றதெனலாம். தைமாசமாகியும் சென்றவாரந் தொடக்கம் மழை பெய்து கொண்டிருக்கின்றது. வேளாண்மை பல விடங்களிற் பெருமழைகாரணமாகச் சேதமடைந்தது. விளைந்துள்ளவயல்களிலுள்ள அரிவியை வெட்டுவதற்கும் இம்மழை பெருமிடையூருக விருக்கின்றதெனக் கமக்காரர் துன்பப்படுகின்றனர்.

புகைரதப்பாதை அள்ளுண்டமை:—சென்றவாரம் பெய்த பெருமழை வெள்ளம் காரணமாக மதவாச்சிக்கும் அநுராசபுரத்திற்கு மிடையேயுள்ள புகைரதப்பாதையிற் சில பாகம் அள்ளுண்டமையால் சில தினங்களாகப் புகைரதப்போக்குவரவு தடைபட்டது. சென்ற ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் புகைரதம்முன் போல் ஓடுகிறது.

மட்டக்களப்பிற் பெருங் காற்று:—இந்த ஜனவரி௴ 8௳ மட்டக்களப்புப்பகுதியில் பெருமழையுடன் பெருங்காற்றும் வீசியதனுற் பல சேதங்கள் நேர்ந்தன மரங்கள் குறுக்கே வீழ்ந்து இடத்தமையினுலும் வெள்ளம் நின்றமையினுலும் அங்குள்ள தெருக்கள் வாயிலாகப் போக்குவரவுசெய்தல் இயலாதாயிற்று. தந்திக்கம்பி மீது மரம் வீழ்ந்தமையினுல் தந்திப் போக்குவரவுக் பண்டாரவளை மார்க்கத் தபாற்போக்குவரவுஞ் சில தினங்களாகத் தடைப்பட்டன. வள்ளங்கள் சில உடைந்தன சில நீரில்மூழ்கின. தென்னைகள் எண்ணிறந்தன வேரோடு வீழ்ந்தன. பலர் இருக்க இல்லிடமின்றிக் கஷ்டப்படலாயினர்.

நீர்விளையாடேல்:—சென்ற கந்தார்க்கொண்டாட்டதினபொருட்டுக் காவெட்டியிலுள்ள கத்தோலிக்க ஆங்கிலகலாசாலை (Sacred Heart English School) மாணவருட் சிலரும் ஒரு குருவும் காவெட்டியிலுள்ள ஆழியாகழிகடலில் நீராடச் சென்றார்கள். காணவாயிலுள்ள உப்புநீர் வடமராட்சி கிழக்கிலுள்ள பன்ன நிலத்திற் பாவாதவண்ணம் இக் கடலிலுள்ள பெருமதகுகள் அடைக்கப்பட்டன. அதனுல் மதகுக்குள் கிழக்குப்பாகத்தில் வெள்ளம் பெருகி றோட்டை அள்ளிப் பெருஞ்சேதம் விளைத்தது. அன்றியும் றோட்டருகில் ஒரு பெரும் ஆழமான குழியையும் உண்டாக்கிற்று. குரு விட்டுக்குத்திரும்பியபின் கொண்டாடச் சென்ற சிறுவருட் சிலர் நீரில் நீந்திவிளையாடினார்கள் அவர்களுள் இருவர் நீரோட்டத்தால் அள்ளுண்டுகுழியுள் அகப்பட்டுமாண்டனர். இவர்புறப்பட்டபொழுது சாரை குறுக்கிட்டதென்றும், அதனைக்கண்ட இவர்கள் அஞ்ஞானிகளாயின் (கிறீஸ்தவரல்லாதவர்போலும்) இப்பொழுது கொண்டாடச் செல்லாது நின்றுவிடுவார்கள் என்று பரிகாசஞ் செய்து கொண்டும் சென்றார்களாம். இனிமேல் இவர் சகுனம் பார்ப்பவரிற் குற்றங் கூறூர் என நினைக்கின்றேம்.

உணவுச்செய்கைமுயற்சி:—இலங்கைவாசிகளின் தேவைக்குப் போதிய நெல்லை இலங்கையிலேயே விளைவித்துக்கொள்ளவேண்டும் என்பது நம்மரசாட்சியாரின் விசேஷஇலக்கு என்பதை எவருமறிவர். இதற்காகவே உணவுச்செய்கைப்பகுதி புதிதாயமைக்கப்பட்டது. இப்பகுதியார் அரசாட்சியாரின் நோக்கத்தை நன்கு நிறைவேற்றுதற்கு வெகுவாய் முயற்சி செய்து வருகிறார்கள். இலங்கையின் தேவைக்கு வருடம் 4கோடி பறை நெல்லுத் தேவையென்பது மதிப்பு. இவ்வளவு நெல்லும் 20 இலட்சம் ஏக்கர் நிலத்தில் விளையுமென்று அரசினர் உத்தேசிக்கிறார்கள். இப்போது இலங்கையில் 6 இலட்சம ஏக்கர் நிலம்மாத்திரம் நெற்செய்கைக்குள்ளாயிருக்கின்றது. இந்தநிலத்தில் இப்போது விளையும் வீதத்தைக்கொண்டே அரசினர் மேற்படி மதிப்புக்களை நிரூபிதிருக்கிறார்கள். இக்தவீதமான விளைவுக்குத்தான் 20 இலட்சம் ஏக்கர் தேவை. புதுமுறையாய்ச் செய்கைகடத்தினுல், அவ்வளவு நிலந் தேவையாய்வராது. இந்த முறையான் செய்கைக்கு 10 இலட்சம் ஏக்கர் மாத்திரமே போதியதாகும். ஆகவே இன்னும் 4 இலட்சம் ஏக்கர் புதிதாய்த் திருத்திச் செய்கை பண்ணவேண்டியிருக்கின்றதென்பது தெளிவு. உணவுச்செய்கைப்பகுதியார் இப் புதிய முறையை எங்கும் அனுசரிப்புக்குக்கொண்டுவருதற்கு முயற்சி செய்கிறார்கள். இப்போது 50 பகுதிகளிலே நிலந்தெரிந்து புதியமுறைப்படி செய்கை நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். மாகாணங்கள் தோறும் நிலங்களைத் தெரிந்து, அவ்வப்பகுதி அரசாட்சி ஏசண்டரின் பார்வைக்குக்கீழ் விட்டிருக்கிறார். எங்குஞ் சனங்கள் புது முறைகளை நேரிற் கண்டு அவதானிக்கவேண்டுமென்பதே நோக்கமாம். உ-தா-கை.

ஹோர்ஸ்பரோவாவி:—சில காலத்தின் முன் வடமாகாண ஏஜண்டராகவிருந்த மிஸ்டர் ஹோர்ஸ்பரோ வடமராட்சிப் பகுதியில் நீர்பாய்ச்சிக் கமஞ்செய்யவேண்டுமென்று மெண்ணங்கொண்டு காவெட்டிக்கணித்தாகத் தம்முடைய நாமத்தினுல் ஒரு பெரிய வாவியை உண்டாக்கியிருந்தனரென்பதைப் பலருமறிவர். இந்த வாவியில் போதிய தண்ணீர் தங்கி நிற்கும்படியும் உப்புநீரும் நல்ல நீரும் ஒருங்குகலவாதபடியும் மிஸ்டர்ஹோர்ஸ்பரோ அவர்கள்உபயமாக சாவகச்சேரி பருத்தித்துறை றோட்டில் குறித்த விடத்திலுள்ள மதகுகளின் கண்களைப் பலகைகள்கொண்டு அடைப்பித்திருந்தார். இந்த மாரியிற் பெருமழை பெய்தமையினுல் தடைபட்ட வெள்ளம் மேற்படி வாவிக்கணித்தான காவெட்டி கட்டைவேலி முதலிய கிராமங்களிற் பெருஞ் சேதஞ் செய்ய அங்குள்ளவர்கள் காரணத்தையறிந்து மதகுகளைத் திறந்துவிடும்படி யோடிச்சென்றும் வேண்டியகண்களைத் திறந்துவிட முடியாமற் போக நாற்புறத்திலுமிருந்து பெருகி வந்த வெள்ளம் (வாவியில்) நின்றவெள்ளத்தையுங் கொண்டு சென்று மேற்படி றோட்டை அணைமல் ஆரத்திற்கு முற்றாய் அள்ளிவிட்டது. இதனுல் இப்பொழுது சாவகச்சேரி பருத்தித்துறை றோட்டால் போக்குவரவுத் தடைபட்டிருக்கின்றது. இந்த றோட்டைப் பழைய நிலைக்குக் கொண்டுவருதற்குப் பல்லாயிரம் ரூபா மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த கஷ்டம் ஊரவர்கள் கொடுக்கும் வரிப்பணத்திற் பொறுத்ததோஅன்றேல் மிஸ்டர் ஹோர்ஸ்பரோ மேற்பொறுத்ததோ யாமறியேம், மிஸ்டர் ஹோர்ஸ்பரோ தமது நாமத்தால் ஒரு வாவியுண்டாக்கத் தலைப்பட்டமை நன்னோக்கங்கொண்டேயாம். ஆனால் சூழ்ந்தஉபாயம், புளியமரத்தைத் தறித்து வண்டியிலேற்றுவது கஷ்டமென வெண்ணி, முந்தியே வண்டியைப் புளிமரத்திற் சேர்த்துக் கட்டிவிட்டுத் தறித்தவர்கள் செய்த உபாயம் போல் முடிந்தது.

### தேகவியோகம்.

கிராமச்சங்க அங்கத்தவருளொருவரும் அடிவுநிலைமை, பரோபகாரசிந்தை முதலிய குணங்களமைந்தவரும் புண்ணிய சீலரும் ஆகிய அல்வாய் தெற்கு ஸ்ரீ. வல்லியார் கணபதிப்பிள்ளை என்பவர் 1920-ம் ஆ௵ மார்கழி௴ 29-௳ இறந்துவிட்டனர். இவர் கற்றன்பாங்கில் உத்தியோகமாயிருக்கும் கடாரசாஅயுர்களுக்கும் கோலா

லம்பூரில் இன்ஜினீர்க் கந்தோரிலுத்தியோகமாயிருக்கும் தியாகராசா அவர்களுக்கும் மட்டக்களப்பு புரொக்டர் தம்பையா அவர்களுக்கும் கொழும்பு மெடிக்கல் ஸ்ருடென்ற் மாணிக்கம் அவர்களுக்குந் தந்தையாயுள்ளவர். இவரை யிழந்து ஆற்றொணுத் துன்புறும் புத்திர சுற்றமித்திருடன் யாமு மனுதாபப்படுகின்றோம். கடித.

## இந்துவாலிபர் சங்கம்.

நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்கத்தாரின் விருப்பத்தின்படி ஸ்ரீ. க. ஞானசம்பந்தமவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் நிகழும் ஜனவரீ 5உ புதன்கிழமை மாலை 6 மணிவரையில் இந்துக்கல்லூரித் தமிழ்ப் பண்டிதரும் இந்துசாதனப் பத்திராசிரியருமாகிய ஸ்ரீ. ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை யவர்களால் வித்தியாதானம் என்னும் விஷயமாக ஒருசிறந்த உபந்நியாசம் செய்யப்பட்டது. ஸ்ரீ. சம்பந்தமவர்களும் ஸ்ரீ. த. சோமசுந்தரமவர்களும் ஸ்ரீ. வே. தம்பையா அவர்களும் ஸ்ரீ. அருட்பிரகாசமவர்களும், அக்கிராசனரவர்களும் குறிப்புரை கூறினர்.

கண்டி இந்துவாலிபர்சங்கமண்டபத்தில் மேற்படி வாலிபர்சங்கத்தாரின் கேள்விப்படி நிகழும் ஜனவரீ 6உ மாலை 7மணிவரையில் பண்டிதர் ஸ்ரீ. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்கள் சாதியபிமானம் என்னும் விஷயமாகவும் மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் பண்டிதர் ஸ்ரீ. மயில்வாகனமவர்கள் 'கல்வி' யென்னும் விஷயமாகவும் உபந்நியாசஞ்செய்தனர். கடித.

## மதுவிலக்கு முயற்சி.

மதுவிலக்கு விஷயங்களிற் தற்காலம் பெரிய அதிர்ச்சி காணப்படுவது மிகவுந் தைரியத்துக்கேதுவான குறிப்பாயிருக்கின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள பலர் தங்களருமையான நேரத்தையும் பணத்தையும் செலவிட்டு மதுபானக்கடைகள் இத்தேசத்தைவிட்டு முற்றாய் அகன்று போகப் பெருமுயற்சி செய்கின்றனர். இம்முயற்சி நிவுகளீருகச் சென்று அங்கும் பலன் விளைக்கின்றது. இற்றைக்குச் சிலநாட்களின் முன்னே புலுகுடுதீவிலுள்ள பெரியோர் கூடி அரசினர் கேட்ட விதத்தை நிறைவேற்றி அங்குள்ள தவறணைகளை வரும் ஆடிமாதத்துடன் நீக்கிப்போட உத்தரவுபெற்றனர். தெல்லிப்பழையிலும் அவ்வித முயற்சியைத் தொடங்கிச்சாராயத்தவறணையை நீக்குவதற்காக 1000 ரூபாவுக்கு மேலான பணத்தைச் சேகரிக்கின்றனர். இத்தொகை தலைவரிப்பணப் பற்றுச்சீட்டை வாங்குவதற்காகவே செலவிடப்படும்.

சுரவில் விஷமுள்ள சர்ப்பத்தைப்போல மெதுவாக வீட்டின் நுழைந்து காத்திராதவேளையில் மனுஷரை மரணத்துக்குள்ளாக்கிவரும் இக்கொடிய சத்துருவைத் தேசத்தினின்று அகற்றப் பிரயாசப்படும் யாவருக்கும் இத்தேசம் கடமைப்பட்டதாயிருக்கின்றது. மதுபானத்தினால் வரும் கேடுகளைக் கைக்கண்ணாடிபோலக்கண்டும் திரும்பத்திரும்பத் தீபத்தில் விழுந்து காயப்படும் அத்தீபத்தை விட்டகலா விட்டில்கள் போன்று மாண்டுபோகும் கோடாகோடி சனங்களின் நிலைமை மகாபயங்கரமானது. மானிடமணம்பிடித்து அவருடன் ஒட்டியிருந்து அவர் செல்லுமிடமெங்குஞ் சென்று தன்னிடத்துள்ள விஷத்தை மெதுவாகத் தேகத்துட் செலுத்திவிடும் நளம்பு போன்று மேலைத்தேசத்தவருடன் ஒட்டிவந்து அவர்களை நாசஞ்செய்தது மாத்திரமன்று இத்தேசத்தையும் விஷமூட்டி நாசஞ்செய்யு மிக்கொடிய குடிவகையை நம்மரசினரி னுதவியுடன் இத்தேசத்தைவிட்டகற்றுவது யாவர்மேலும் பொறுத்த கடனாகும்.

தற்காலம் தவறணைகளை நீக்குதற்கு அரசினர் உதவியாயிருப்பதுபோல வரப்போகும் காலத்திலும் அங்குமிங்கும் சோதனைகாரரை நியமித்து இரகசியமாய்க் குடியாதபடி தடுப்பரேல இத்தேசம் மற்றத்தேசத்திலும் விசேஷமாயிருக்குமென்பதற் கையமின்று. உதயதாரகை.

---

கத்தோலிக்க கிறீஸ்துமதத்தைச் சார்ந்தவரொருவர் இக்கடிதத்தை எமது பத்திரிகையில் வெளியிடும்படி பரிந்துகேட்டனர்.

இந்துசாதன பத்திராசிரியரவர்கட்கு:

மகிமைவாய்ந்த ஐயா, தயவுசெய்து பரோபகாரமாக இக்கடிதத்தை தமது அரிய பத்திரத்தின் ஒருகோணத்திற் பிரசுரஞ் செய்யும்படி வேண்டுகின்றேன்.

## கனந்தங்கிய கத்தோலிக்கப் பிரபுக்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

ஐயன்மீர்!

எங்களது வெள்ளைக்காரக் குருமாரும், புரோட்டெஸ்டாண்டு வெள்ளைக்காரப் பாதிரிமாருஞ் சேர்ந்து நம்தேசத்தில் பண்டுதொட்டுப் பரம்பரையாக நிகழ்ந்துவந்த சாதிக் கட்டுப்பாட்டை அழித்துப்போடுகிறேமென்று சிறிது காலமாகக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றார்கள். இதுகாறும் இவர்கள் தேவசம்பந்தமான விஷயங்களில் சாதி வித்தியாசம் பார்ப்பது நீதியல்ல, தேவனுக்கு எல்லா மனுஷருஞ் சரிதான்; அவர் பெருமை சிறுமை பார்க்கமாட்டார்; என்று போதித்து வந்தமையால் நாங்கள் அக்கட்டளைக்கு அமைந்து நடந்துவந்தோம். இப்போது அவர்கள் லௌகிக விஷயத்திலும் அந்த முறையை அனுசரிக்கவேண்டுமென்று மிகவும் நிர்ப்பந்தஞ் செய்கிறார்கள். ஒரு பிரதானமான ஐரோப்பிய குரவர் சமீபத்தில் நடந்த ஓர் விசேடித்த கொண்டாட்டத்துக்கு யாதோர் விசாரணையுமின்றி ஓர் குறைந்த சாதியானைக் கொண்டுவந்து மற்றையோரிலும் பார்க்க மேம்பாடான ஆசனத்தி லிருத்தினதுமன்றித் தான்செய்தது சரியினமென்று குறைசொன்னவர்களைக் கடிந்து தன் விருப்பத்தையே முழுதுஞ் சாதித்துவிட்டாராம். அந்தோ! இவர் செய்தது எத்துணைப் பாதகத் தொழில் என்று பாருங்கள். குறைந்த சாதியானொருவனைப் பிரசித்தமாய் மற்றையோர் சமூகத்தில் யாதுங் காரணமின்றி உயர்த்துகிறபோது மற்றவர்கள் குறைக்கப்படுகிறார்கள். சாதி வித்தியாசம் பார்க்கக்கூடாதென்று எல்லவரையும் சமமே நடத்துகிற இவர் தன் நடத்தையினுல் ஒரு பகுதியை முற்றாக அழிக்கிறார். இவர் இன்னும் மூன்று வருஷங்களுக்கிடையில் கத்தோலிக்கருக்குளளே சாதிக்கட்டுப்பாடு இல்லாமல் தொலைத்துப்போடுகிறேனென்று சபதம் பண்ணியிருக்கிறாராம். இவருடைய இந்த நவீன முயற்சியானது "பிள்ளையார்த்துக்குப் போய் புருஷனைப் பறிகொடுத்தது" போல, உள்மதக் கலகங்களையும், அமைதியீனங்களையும் உண்டாக்குமென்பதில் சிறிதும் ஆக்ஷேபமில்லை. இதுவரையில் நாங்கள் கம்மாளர் முதல் பள்ளர் ஈறுகவுள்ள சாதியாரைத் தேவாராதனைக் குரிய இடங்களிலே மற்றச் சமயத்தவர்களைப்போல வன்கண்மையாக நடத்தாமல் சம மரியாதையாகச் சிறிதும் வேற்றுமையின்றி நடத்திவருகின்றோம். அவர்களுந் தேவாராதனைக்காலந் தவிர மற்றைய காலங்களில் பழைய முறைப்படி பின்னைகளைப்போல எங்கள் கட்டளைகளுக் கமைந்து வேண்டிய பணிவிடைகளைக் கிரமந் தவறாது செய்து வருகின்றார்கள். இங்ஙனம் எல்லாச் சாதியாரும் தத்தம் குலாசாரப்படி ஒழுகி வருவதினுல், உலகத்திலே ஒருவிதமான காரியந் தாட்சியுமின்றி எல்லா வேலைகளும் கிரமமாக நடைபெற்று வருகின்றன.

இச்சாதிக் கட்டுப்பாடானது இன்று நேற்று உண்டானதல்ல. ஆதி காலந்தொட்டு நடந்து வருகின்றது. இக்குலாசாரம் இந்தியா இலங்கை வாசிகளுள்ளே மாத்திரம் இருந்ததன்று. ஆங்கிலேயர், பிரான்சியர், ஜர்மனியர், இற்றலியர், கிரேக்கர், துருக்கியர் முதலிய எல்லாத் தேசத்தாரிடத்திலு மிருந்து வருகின்றது. இத்தேசத்தா ரெவரும் தேவ வழிபாடு செய்யுஞ் சமயங்களில் சமத்துவமாய் நடப்பார்களேயன்றி, பந்திபோசனம் பாணிக்கிரகணம் முதலிய உலக விஷயங்களில் நம்மவரிலும் பார்க்க வெகு நுட்பமாகச் சாதி வித்தியாசம் பார்ப்பார்கள். நமது யாழ்ப்பாணத்துக்குக் கொழும்பி லிருந்து கவணர்மார் வருஞ் சமயங்களில், விருந்து நடக்கும்போது, கச்சேரி கோடு முதலிய இடங்களில் உயர்ந்த உத்தியோகத்தி லிருந்த உலாந்தாக்காரர் பறங்கிக்காரர் ஆகியோரை விருந்துக்கழைக்காமல் கழித்துவிட்டு நடத்தியது அநேகருக்கு ஞாபகத்தி லிருக்கலாம். இவ்வளவாக சாதியில்லையென்று வாய்ஞானம் பேசுகிற பாதிரிமார் தாங்கள்பெற்ற பெண்மக்களை பள்ளர் பறையர் முதலிய ஈன சாதியினருக்கு விவாகஞ் செய்து கொடுப்பார்களா? அங்ஙனமின்றிப் பிறரைச் சாதி வித்தியாசம் பார்க்கக்கூடாதென்று கண்டிப்பது என்ன நீதி! தனக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயமா? எங்களுடைய குருமார் உலக இச்சைகளை வெறுத்த துறவிகளானபடியால் அவர்களுக்கு எல்லாருஞ்சரிதான். அதுபோலக் குடும்பத்திலுள்ளவர்களாகிய எங்களையும் நடக்கவேண்டுமென்று வற்புறுத்துவது முறைமையன்று. இந்த வெள்ளைக்காரக் குருமார் தாங்கள் பிறந்த தேசங்களில் குடும்பத்திலுள்ள தமது சொந்தக்காரர் சாதிக்கட்டுப்பாட்டைத் தழுவி நடப்பதைப் பிரத்தியட்சத்திலறிந்திருந்தும், இந்தத் தேசத்துக்கு வந்து பாரம்பரியமாயுள்ளதாகிய சாதிக் கட்டுப்பாட்டை அழிக்கத் துணிவது மிகவும் விசனிக்கத்தக்கதாக இருக்கின்றது.

கனவான்களே! சாதிக்கட்டுப்பாட்டை அழித்துப்போட்டால் கம்மாளத்தொழில் முதல் மலகூபவேலைவரையுள்ள எல்லா வேலைகளையும் ஒவ்வொருவருந் தான்தான் பார்க்கவேண்டியதாய் வந்துவிடுமன்றோ? எல்லாரும் எசமான்களாயிருந்தால் பல்லக்குச் சுமக்க ஆளகப்படுமா? இப்போது இவர்கள் தொடங்கியிருக்கும் முயற்சி தென்றல் முற்றிப் பிரசண்டமாருதமானதுபோல உலகத்தில் அமைதியீனங்களையும், சமய வெறுப்பையும், ஒற்றுமைக் குறைவையும் உண்டாக்குமேயன்றி ஒரு நன்மையையும் பயக்கமாட்டாது. சில பெரியோர்கள் சேர்ந்து இந்த வீண் கட்டுப்பாட்டை நிவிர்த்திசெய்யும்படி மாட்சிமை தங்கிய எங்கள் மேற்றிராணி ஆண்டவருக்கு ஓர் மனு எழுதியிருக்கின்றார்களாம். அதற்கு அவர் சரியான உத்தரவளிக்காவிட்டால், நாங்களனைவரும் ஏகோபித்து பொது இடத்தில் ஒரு மகாநாடு கூடி எல்லாரிடத்திலுங் கையெழுத்து வாங்கி ஒரு மன்றாட்டுப் பத்திரம் எழுதி அதை எங்கள் சகப்பிதாவாகிய பாப்பாண்டவருக்கு அனுப்பி இச்சங்கடமான ஏற்பாட்டை எடுக்கும்படி செய்விப்போம். பராமுகமாயிராதீர்கள். உலகத்திலே பெருங் கேடுகள் சம்பவிக்கப்போகின்றன.

நமது சமயவிஷயங்களைப் பெரிதுங் கவனிக்க வேண்டியவராகிய "சத்தியவேதபாதுகாவலன்" பத்திராதிபர் இதுவரையும் இவ் விஷயத்தைக் குறித்து ஒன்றும்பேசாதிருப்பதினுலேயே யான் இவ்விஷயத்தை "இந்துசாதன"த்திற்கு அனுப்ப நேரிட்டது. பாதுகாவலன் பத்திராதிபர் இவ் விஷயத்தில் மௌனஞ் சாதித்தலினுல் எங்கள் சமயத்திற்கு நன்மை வாராது தீமையே விளையுமென்று நினைக்கின்றேன்.

---

## 35-வது இந்தியன் நாஷனல் காங்கரஸ்.

(முற்றொடர்.)

### இவருக்கு என்ன உரித்து.

அரசர்பெருமான் தம் அதிகாரத்தைக்கொண்டு சனப்பொறுப்பாட்சியை நமக்குக் கொடுக்காத பிரகாரம் இந்திய அரசியற் சட்டத்தில் (புதிய சீர்திருத்தச்சட்டம்) சில பிரமாணங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நமது யோக்கியதைக்கும் திறமைக்கும் ஏற்றபடி நமக்குச் சனப்பொறுப்பாட்சி வழங்கப்படுமாம். அது எப்போது கொடுக்கப்படும், எவ்வளவு கொடுக்கப்படும் என்பது பிரித்தானிய பாளிமேந்தாரின் இஷ்டப்படியாகும். பிரித்தானிய இந்தியர்களிடத்து பிரித்தானிய பாளிமேந்தாருக்கு இருக்கும் உரிமை என்னவோ? தெரியவில்லை. வார்ட்டு சபை, பாளிமேந்து சபை அங்கத்தவரைத் தெரிய நமக்கு உரிமை இல்லை. நம் சொல்லும் பாளிமேந்திற் செல்லாது. இங்ஙனமாகப் பாளிமேந்தார் நம்மீது உரிமை கொண்டாடுவது எதற்கு? இவர்கள் இங்கிலாந்து ஸ்கொட்லாந்து, அயர்லாந்துக் குடிகள் மீது இவ்வித உரிமை கொண்டாட முடியுமோ. கொண்டாடுவார்களானுல் பாளிமேந்தைக் கடைசிப் பாளிமேந்தாகப் பிரித்தானிய பிரசைகள் செய்துவிடுவார்கள். பிரித்தானிய பாளிமேந்தார் அநியாயமான உரிமையைக் கொண்டாடுகிறார்கள். இவ்வித உரிமையைக் கொண்டாடக்கூடாதென்று நாம் மறுக்கிறோம். இந்தியர்கள் அடிமைகளாகவும் பிரித்தானியர் இங்கிலாந்தும் சொத்தாகவுமிருந்தால் பிரித்தானிய பாளிமேந்தார் கொண்டாடும் உரிமை நியாயமானதாகும். இவ்வாறு இங்கிலாந்து கொண்டாடுவது சிறிதுகாலத்தின் முன் கோர்ந்த யுத்த நோக்கத்திற்கும் சுயநிர்ணயத்திற்கும் முழு விரோதமாகும். பிரித்தானிய பாளிமேந்தார் இந்தியரிடத்து அநியாயமாக இல்லாத உரிமையைக் கொண்டாடுதல் இந்தியாவுக்கு அவமானமாகும், தெய்வத்திற்கும் ஏற்காது. இங்கிலாந்து அமெரிக்கர்மீது இவ்வாறான உரிமையைக் கொண்டாடியதனுலும் அவர்கள் விருப்பத்தைக் கவனியாமல் வரிவிதிக்கத்தொடங்கியமையாலுமே இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் யுத்தமுண்டாயதென்பதைப் பிரித்தானிய பாளிமேந்தார் அறிய வேண்டும். இவ்விஷயங்களை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். இந்திய அரசின் 41-ம் பிரிவுக்கிணங்க பாளிமேந்தார் அரசர்ஆகியோர் சம்மதப்படிஒருகமிஷன் 10வருஷத்தின்பின் ஏற்படுத்தப்படுமாம். இந்திய மந்திரி பத்துவருஷத்தின்பின் அக்கமிஷனை ஏற்படுத்தாவிட்டால் அல்லது அதற்கிடையில் சீர்திருத்தச் சட்டத்தை மாற்றிவிட்டால் நமது கதி என்ன? நாம் பின் என்னசெய்யலாம்.

### இந்திய மந்திரி கோடுக்கலாம்.

வேண்டுமானுல் அடிக்கடி இந்தியருடைய உரிமைகளுக்குப் பரிந்துபேசும் இந்திய மந்திரி நம்மோடு ஒத்துழைத்து லெட்டர்ஸ் பேடன்ட் என்னும் சட்டத்தைக் கொண்டு மந்திரி சபையோடு கலந்தும் அரசர்பெருமானின் உத்தரவு வாங்கியும் நமக்குச் சனப்பொறுப்பாட்சி உடனே வழங்கலாம். அவருக்கு இவ்வித அதிகாரமிருக்கிறது. இதுவரையிலும் அவர் பிரமாதமாகப் பரிந்து பேசுவதை ஒட்டி அவருடைய செய்கைகள் செய்யப்படவில்லை. ஒரு நல்ல காரியஞ் செய்யாத இரண்டாவது சார்லஸ் அரசர் தாம் இதமாகப் பேசிய வெல்லாம் தம்முடையவென்றும், மூட்டாட்காரியங்களெல்லாம் தம்முடைய மந்திரிகளுடையனவென்றும் சொல்லியதுபோல், இந்தியாவுக்குப் பரிந்துபேசுவதெல்லாம் தம்முடையதென்றும் ஆனுல் தம்முடைய மன நல்லதுசெய்ய முடியாமல் கஷ்டப்பட்டிருக்கிறதென்றும் மிஸ்டர் மாண்டேகுவும் அவரைச் சேர்ந்தோர்களும் நினைத்துக்கொள்ளலாம். அவ்வாறு மிஸ்டர் மாண்டேகுவும் அவரைச்சேர்ந்தோர்களும் நினைத்துக்கொள்ள ஆதாரமில்லையென்று நாம் சொல்ல முன்வரவில்லை. காமன்ஸ் பார்லிமேந்தின் சம்மதத்தைப் பெற்றுவிடலாமென்ருலோ அதற்கும் இடமில்லாதிருக்கின்றது. தற்காலமுள்ள காமன்ஸ் பார்லிமேந் மிஸ்டர் லாயிட் ஜார்ஜ்பக்கம் திரும்பியிருக்கிறது. காமன்ஸ்பார்லிமேந்து எவ்வளவு இந்தியர்மீது கருணை வைக்கமாட்டார்களா? தம்முடைய அபிப்பிராயத்திற்கு மந்திரிசபையும் பார்லிமெண்டார்களும் ஒத்துவராமற்போனுல், இந்திய மந்திரி, முன்னர் எவ்வளவோ முறை குடியேற்றநாட்டு மந்திரிகள் செய்திருப்பதுபோல், தைரியமாக எழுந்து நின்று, இந்தியாவின் அரசியல் நிலையை அறிந்து இந்தியாவுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் பங்கமுண்டாமல் இராஜப்பிரதிநிதிக்கு உத்தரவனுப்பி, இப்போது ஜனப்பிரதிநிதித்துவமுள்ள ஆட்சிமுறையை ஜனப்பொறுப்பாட்சியாகத் தம் சொந்த அதிகாரத்தினுல் செய்யக்கூடாதா? இந்தியமந்திரி தம் சொந்தப் பொறுப்பில் இந்தியாவில் ஜனப்பொறுப்பாட்சி ஏற்படுத்தினுல் இந்தியர்கள் அவருக்கு எப்போதும் நன்றிபாராட்டுவோர்கள்.

### எங்குமில்லை.

1919-ம் வருஷத்திய இந்திய கவர்ன்மெண்ட் சட்டப்படி இந்தியர்களை ஜனப்பொறுப்பாட்சிக்குக் கொண்டுவந்துவிடுவதாகக் குறிப்பிடப்பட்ட முறைகள் நாகரிகமுள்ள ஒரு தேசத்திலும் காணப்படவில்லை. அவைகள் நேர்மையானவைகளல்ல. அவைகள் நாம் கோருதற்கு நேர் விரோதமானவைகளாகும். 1688-ம்வருஷத்திலுண்டான புரட்சியின் பயனுக இங்கிலாந்து ஜனங்கள் ஜீவாதாரமான உரிமைகளை அடைந்தார்கள். அவைகள் இங்கிலாந்து ஜனங்களுக்கும் அரசருக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின்பேரில் கிடைத்தனவாகும். இரண்டாவது ஜேம்ஸ் அரசர் ஜனங்களின் ஜீவாதாரமான உரிமைகளை மதித்து நடவாததற்கே அவர்மீது பெரும் பழி சுமத்தப்பட்டது.

இதற்குப்பிறகு அக்கிராசனர் ஸ்ரீமாந் ஆச்சாரியார், இந்துஜனங்கள் அரசாட்சி செய்த முறைமையையும் அக்காலத்தில் ஜனங்கள் சுகசௌக்கியமாயிருந்ததையும், இந்து அரசர்களுக்கும் குடிகளுக்குமுள்ள அயோக்கியபாவத்தையும் குடிசனங்களின் விருப்பத்திற்கு மாறுக நடந்த அரசர்கள் சிம்மாசனத்தினின்று நீக்கப்படும் விபரத்தையும் இந்துச் சட்டம் சாஸ்திரங்களினின்று எழுதப்பட்ட முறையையும் முஸ்லிம் நாகரிகமும் இந்து நாகரிகமும் சேர்ந்த காலத்திலிருந்து அரசாட்சிமுறையையும், இந்து அரசாட்சிமுறைக்கும் முஸ்லிம் அரசாட்சி முறைக்கும் ஒத்திருந்ததையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

### இந்தியர்களின் தியாகத்தன்மை.

முற்காலத்தில் அரசர்களுக்கும் குடிகளுக்குமுள்ள சம்பந்தத்தையும், அரசர்கள் தவறி நடந்தால் அவர்களை நீக்கவோ வேறு ஒருவரை ஏற்படுத்தவோ வேண்டுமென்பதையும், தற்கால இந்தியர்கள் அறிந்திருக்கிறார்கள். இந்த முஸ்லிம் அரசர்களின் பதவியையும் அந்தஸ்தையும் இங்கிலாந்து அங்கீகரித்துக்கொண்டதென்று சொல்லப்படுகிறது. அவ்வாறு சொல்லப்படுவதற்கு ஏதேனும் அருத்தமிருக்குமானுல், நல்ல இந்து அரசர்களும் நல்ல முஸ்லிம் அரசர்களும் நடந்துகொண்ட மாதிரி, அரசாட்சிசெய்தமாதிரி நடந்துகொள்ள வேண்டுமென்பது அவசியமல்லவா? கெட்ட அரசர்கள் வழியைப் பின்பற்றக்கூடாது. ஆறுநாடிங்கிலை முற்றுகைபோட்டு வெற்றியடைந்ததிலிருந்து இங்கிலிஷ் ஆட்சி இந்தியாவில் ஸ்தாபிக்கலானது. கிளைவுக்கு வெற்றி கொடுத்தவர்கள் இந்தியர்களாகும். அவருக்கு உதவி செய்தவர்கள் இந்தியர்களாகும். இந்தியச் சிப்பாய்கள் கஞ்சி குடித்துவிட்டுச் சாதத்தை இங்கிலிஷ் சோல்ஜர்களுக்குக் கொடுத்துதவினுர்கள். அவர்களுடைய தியாகத்தன்மையைப்பற்றிப் பல சரித்திரகாரர்கள் புகழ்ந்து எழுதியுள்ளார் அக்காலமிருந்த சிற்றரசர்களுக்குள் கலகங்கள் வேண்டாமென்றும், நாட்டை இங்கிலிஷ்காரரிடத்தில் ஒப்புவித்து அவர்களைக்கொண்டு சண்டை யில்லாதபடிக்கு அரசாட்சி செய்யச் சொல்லவேண்டுமென்றும் மனமொப்பிப் பல சிற்றரசர்களும் இந்தியர்களும் இங்கிலிஷ்காரர்களுக்கு இந்தியாவை ஜயித்துக் கொடுத்தார்கள். இதிலிருந்து இங்கிலாந்துக்கும் இந்தியர்களுக்கும் மனமொப்பிய உடன்படிக்கை ஏற்பட்டதென்று அறியவேண்டும்.

### பலம் பெரிது.

இங்கிலாந்து பலம் பெரிதென்றுநினைத்து இந்தியர்களுடைய உரிமைகளை அலட்சியஞ்செய்து விடலாமென்ற எண்ணத்தை விட்டொழிக்க வேண்டும். இங்கிலாந்து இந்தியாவை ஜயிக்கவில்லை. நம்மை ஜயித்தாற்போல் நம்மீது சர்வசுதந்திரம் பாராட்டக்கூடாதென்று நாம் சொல்வதை இங்கிலாந்தாவது பார்லிமெண்டாவது கிரகித்தால், 1688-ம் வருஷத்திய புரட்சிக்குப் பிறகு ஜீவாதாரமான உரிமைகள் ஆங்கிலேயர்கட்குக் கொடுபட்டது எந்த ஆதாரத்தைக் கொண்டென்று கேட்கின்றேம்? இந்தியா இங்கிலீஷ்காரரால் ஜயிக்கப்பட்டதென்று சொன்னுல் இங்கிலாந்தின் கதி என்ன? அது எவ்வளவு முறை ஜயிக்கப்பட்டிருக்கின்றது? ரோமாபுரி சக்கரவர்த்தி வியாலும், ஜெர்மனி எக்பர்ட்டாலும், டென்மார்க்கு அரசரான கானூட்டாலும், நார்மன் அரசர் வில்லியம் என்பவராலும் ஜயிக்கப்படவில்லையா? இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் மனமொப்பிய ஒப்பந்தமுண்டானது போல் இங்கிலாந்துக்கும் அதை முன்னர் ஜயித்த பல தேச அரசர்களுக்கும் ஏற்படவில்லை யென்று சரித்திர ஆதாரமில்லை. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் மனமொப்பிய ஒப்பந்தம் ஏற்பட்டது உண்மை. இவ்வாறிருக்கும்போது, இங்கிலாந்து பார்லிமெண்டார் நம்முடைய முன்னேற்றத்திற்குத் தாங்கள்தான் நிர்த்தாரண கர்த்தா என்று சொல்லிக்கொண்டு உரிமைகொண்டாடுவது அஸம்பாவிதமாகும். பார்லிமெண்டார் நம்மீது தகாத உரிமைகொண்டாடுவதை ஏற்றுக்கொண்டிருப்போமாகுல், அது நமக்கு மரணத்தைத்தான் உண்டாக்கும்.

### நம்முடைய பரிதாப நிலை.

சிப்பாய கலகம் நடந்தபோதும் சமீபத்தில் நடந்த யுத்தத்திலும் இங்கிலீஷ்காரருக்கு உதவி புரிந்திருக்கிறேம். அப்போது சுயநிர்ணயம் சுதந்தரம் என்ற பேச்சுக்கள் பேசப்பட்டன. யுத்தம் நின்றவுடன் இந்தியாவுக்கு அனர்த்த முண்டாகியது. இந்தியாவின் நிலை பரிதாபமாகிவிட்டது. தற்காலம் இந்தியாவிலிருப்பதுபோல், உலகத்தில் எந்த நாகரிக தேசமும் இல்லையென்று சொல்லலாம். நம்முடைய பரிதாப நிலையை அரசியல் தத்துவ ஞானியான எட்மண்ட் பர்க்தன் எழுதவேண்டும்.

நம்முடைய பரிதாப நிலைக்கு முக்கியமான ஆறு காரணங்களிருக்கின்றன. (1) யுத்தத்திற்குப்பிறகு இந்தியா சுதந்தர சூரியனைப் பார்க்கலாமென்று ஆவல்கொண்டிருந்தபோது அநாகரிகமான ரௌலட் சட்டம் ஏற்படுத்தப்பட்டதாகும். (2) உலகத்தில் இதுவரையில் ஏற்படாததும் இந்தியா கண்டறியாததுமான பஞ்சாப் படுகொலை. (3) படுகொலை ஏற்பட்டதற்குப் பரிகாரம் செய்யாமல் அநுவிஷயமாக இந்தியா கவர்ன்மெண்டாரும், பிரிட்டிஷ் மந்திரி சபையாரும், லார்டு சபையினரும் இந்தியர்கள் உரிமை விஷயத்தில் நடந்துகொண்ட மாதிரி. (4) கிலாபத் விஷயத்தில் பிரிட்டிஷார் கொடுத்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாதது. (5) பிரிட்டிஷ் குடியேற்றநாடுகளில் இந்தியர்களைப் படாதபாடு படுத்துவதும் அதற்குப் பரிகாரமில்லாம லிருந்துவருவதும்.

(6) கடைசியாக, புதியசீர்திருத்தத்தின் பயனுகத் தற்காலநிலை நெருக்கடியாக ஏற்பட்டிருப்பதுடன், நாடெங்கும் அமைதியின்மை ஏற்பட்டிருக்கின்றது. இதுமாத்திரமல்ல, நான் ஏற்கனவே சொல்லியபடி இந்தியர்களாகியநாம் ஜவாப்தாரியான ஆட்சிக்குத் தகுதியுள்ளவர்களா? இல்லையா? வெனப்பரீட்சிக்கவேண்டும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அதிகார சுதந்திரத்தைக் கொண்டாடுகின்றனர். இத்தகைய விதிகளுடன் வழங்கப்பட்டிருக்கும் சீர்திருத்தம் கவலைகிடத்தையுண்டாக்குகின்றது. சீர்திருத்தத்தின் அம்சங்களைப்பற்றித் தேசிய மகாநாடு தனது திடமான அபிப்பிராயத்தை அது வழங்கப்பட்டது முதல் பிரயோஜனமற்றதென்றும், இந்தியர்களுக்குச் சீக்கிரமாகவே ஜவாப்தாரியான ஆட்சி வழங்கப்படவேண்டுமென்றும் வற்புறுத்தி வருகின்றது.

இத்தகைய பிரயோஜனமற்ற சீர்திருத்தத்தை வழங்கி, ஏன் இந்தியாவிற்கும் மற்றக்குடியேற்றநாடுகளுக்கும் வித்தியாசம் பாராட்டவேண்டு? குடியேற்றநாடுகளான கனடா, நியூஜிலெண்ட், ஆஸ்ரேலியா, தென் ஆபிரிக்கா, நியூபவுண்ட், லண்ட் ஆகிய குடியேற்றநாடுகளுக்கு மாத்திரமல்ல, இன்னும் சிறிய குடியேற்ற நாடுகளுக்கும் ஜவாப்தாரியான ஆட்சி வழங்கப்பட்டிருக்கவில்லையா? இந்தியாவிற்கு ஏன இத்தகைய ஆட்சி வழங்கப்படக்கூடாது? எதற்காக இவ்வித்தியாசம் பாராட்டவேண்டும்? தற்சமயம் வழங்கப்பட்டிருக்கும்சீர்திருத்தம், இனிமேல் ஏற்படும்போகும ஜவாப்தாரியான ஆட்சிக்கு அடிப்படையென்று சொல்வதற்கு என்ன காரணங்களிருக்கின்றனவோ தெரியவில்லை, இப்புதிய சீர்திருத்தத்திலிருந்து ஜவாப்தாரியான ஆட்சி உண்டாகுமென்ற நம்பிக்கை ஏற்படுமோ என்று சற்று ஆராய்ந்து பார்த்தால் ஜவாப்தாரியான ஆட்சி உண்டாவதற்கு இடமில்லை யென்பதைப் பல தேசத்துச் சரித்திரங்கள் விளக்கிக் காட்டுகின்றன. தேசமெங்கும் அமைதியீனம் ஏற்படுத்துவதற்குவழி இந்தியாவிற்கு ஜவாப்தாரியான ஆட்சி வழங்கப்படுவதைத்தவிர வேறுவழியில்லையென்று தேசமும் தேசிய மகாநாடும் ஒருமிக்கத் தீர்மானித்திருக்கின்றது. (வரும்).

## மகாத்மா காந்தி அவர்களின் உபந்நியாசம்.

இந்த நிர்ணயத்தை இந்திய மகாசன சபை அங்கீகரிப்பதே நீதியாகும். (சமாதானமான வழிகளையும் நியாயவரம்பு கடவாத மார்க்கங்களையுங் கைக்கொண்டு சுயராச்சியத்தைப் பெறுதலே இந்த மகாசனசபையின் நோக்கம் என்பதே நிர்ணயம்). ஆங்கிலருடைய பரிபாலனத்தை நாம் எடுத்தெறியவொண்ணாது. நாங்கள் பல சங்கடங்களை அநுபவிக்கின்றோம். அவற்றை நீக்குவது இந்தியனாகிய ஒவ்வொருவருக்கும் பொறுத்த கடமையாகும். ஆங்கில அரசினர் தாம் எங்கட்குச் செய்தவரும் பிழைகளை நீக்கப் பிரயத்தனஞ்செய்யாது விடுவதுடன் அமையாது, தாஞ்செய்வது பிழைதான் என்பதையும் ஒத்துக்கொள்ளவும் பின்நிற்கின்றனர். அவர்கள் இந்த நிலையில் நிற்கும்போது நாங்கள் அவர்களிடத்தில் நினைத்த காரியங்களைப் பெற்றுக்கொள்ளலா மென்பது சந்தேகமாகும். எங்களுக்காகிய நீதியை ஆங்கிலர் செய்யாவிட்டால் அவர்களுடைய தொடர்பு எங்கட்குத் தேவையில்லையென்பதை, எவ்வகையான சங்கடம் வந்தாலும் உலகத்தார்க்கு நாமெடுத்துக் காட்டுதல்வேண்டும். என்னவந்தாலும் ஆங்கிலபரிபாலனத்தை நியாயமின்றி நீக்கிவிடவேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. ஆங்கிலர் எங்கட்கு நன்மைசெய்யவேண்டுமென்னு மெண்ணமுடையவரானால் அவர் தொடர்பை நீக்குவது எங்கட்குச் சித்தமல்ல. எங்கள் சுசுதிக்குரிய கௌரவத்தை அவர்கள் பொருட்படுத்தாவிட்டால் அவர்கள் தொடர்பை நீக்கவேண்டியே வரும்.

சுயராச்சியத்தைப் பெறுதெப்படியென்ற விஷயத்தில் வங்காளப் பிரதிநிதிகட்கிடையே நேற்றுச் சில திருப்தியீனங்கள் உண்டாயின. ஆனால் அபிப்பிராயபேதம் நிகழ்வது சகசம், புருஷனுக்கும் மனைவிக்குமிடையிலும் மகனுக்குந் தகப்பனுக்குமிடையிலும் அபிப்பிராயபேதங்கள் நிகழ்வதையும் நான் அநுபவத்திற் கண்டிருக்கின்றேன். நேற்று நிகழ்ந்த விஷயத்தில் நான் சொல்வதற்றை இருபகுதியாருங் கேட்டுக்கொள்ள உடன்பட்டுக்கொண்டனர். கேட்பதுடன் அமையாது இருபகுதியாரும் சமாதானமாதற்கும் உடன்பட்டுவிட்டனர். இனிமேல் அவர்கட்கிடையே ஒருவகையான திருப்தியீனமும் வரமாட்டாது. நீங்கள் தைரியமுள்ளவர்களாக விருந்தால் உங்கட்கிடையேயுள்ள திருப்தியீனங்களை யகற்றித் தேசநன்மையின் பொருட்டு உழைக்கவேண்டுமென்பதே உங்கட்கு நான் சொல்லத்தக்கது. நாங்கள் நன்மையடைவதானால் பல கஷ்டங்களை யனுபவித்தே தீரவேண்டும், எங்கள் உதிரத்தைச் சிந்தவேண்டியும் வரும். ஆனால் மற்றவர்களுடைய உதிரத்தை நாங்கள் சிந்த எண்ணவொண்ணாது. எங்களுட் காயமடைந்தவர்களுக்காகவும் இறந்தவர்கட்காகவும் நாம் அதிகம் துன்பப்படவேண்டியதில்லை. மற்றவர்களால் இறப்பதைக்காட்டிலும் நம்மவர்களால் நாமிறப்பது கௌரவமாகும். இரகசியப் பொலிசர் நம்மவர்களாக விருந்தால் அவர்கள் கையால் இறப்பதினால் வருங் குறைவு யாதுமில்லை. நீங்கள் குற்றஞ்செய்யாமலும் பழிக்குப் பழிவாங்காமலும் இருக்கவேண்டும். அங்ஙனஞ் செய்யத் தவறினால் நாங்கள் எடுத்துக்கொண்ட கருமமெல்லாம் பிரதிகூலமாய்விடும். நீங்கள் அரசினருடன் ஆயுதமெடுத்து யுத்தஞ்செய்ய வெண்ணக்கூடாது. மனோசக்தியையே உபயோகித்தல்வேண்டும். மனோசக்தி சந்நியாசிகட்கும் முனிவர்கட்கும் மாத்திரம் உரியதல்ல. ஆண் பெண் என்னும் பேதமின்றி எங்கள் எல்லாருக்கும் அது உரியதாகும். ஆதலால் இந்த நிர்ணயத்தை உங்களெல்லாரையும் அங்கீகரிக்கும்படி யான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இது கடவுளருளால் கைகூடும்.

## கடிதம்.

### சிவத்துக்கு மேலில்லைத் தெய்வம்.

சைவத்திருவாளர்களே!

உலகமானது தோன்றிநின்றொடுங்கும் மூவியல்புடைமையின் கடபடாதிகளைப் போலக் காரியமேயென அநுமானத்தாலுணரப்படும். அங்ஙனமாய உலகமோ தன்னைக் காரியப்படுத்தும் தோற்றக் கேடுகளற்ற ஒரு முதல்வனையுடைத்தாயிருத்தல்வேண்டும். அத்தோற்றக் கேடுகளற்ற முதல்வன் யாவனோ வென்று ஆராய்வுழி, மகாசங்காரகாரணராகிய சிவபிரானேயென்று மெய்ந்நூல்களாகிய வேதசிவாகமங்கள் கூறுகிற்கும். பிறப்பிறப்பற்றது எதுவோ அதுவே பதியாகும். பிறப்பிறப்புள்ளது எதுவோ அது பசுவாகும். இங்ஙனம் எடுத்தாளப்பட்ட இரண்டு தன்மைகளுமே பதிக்கும் பசுவுக்குமுள்ள தாரதம்மியங்களாகும். அப்பரமபதியாகிய சிவபிரானையொழிந்த ஏனைய தேவர்களின் சரிதைகளினெல்லாம் அவ்வத் தேவர்களின் ஜனனமரணங்களைக் குறித்த வைபவங்கள் மிகுதியுங் கேட்கப்படுவதால், அங்ஙனம் ஜனனமரணங்களிற் கட்டுப்பட்டு அலமந்து திரியுமொருவரைப் பதியெனக்கோடல் ஒரு வாற்றானுஞ் சாலாது. தோற்றகேடுகளை யுடையராயிருந்தும், மனிதத்தன்மைக்கு மேற்பட்ட செயற்கருஞ் செயல்களாகிய பல அற்புதங்களைச் செய்த தெய்வத்தன்மையுடைய ஒருவரைப் பதியெனக் கோடலான் வரும்இழுக்கென்னை யென ஒருவர் ஆக்ஷேபந் தொடுக்கின், அத்தகையோரை அடியார் வருக்கத்தின் வைத்து வழிபடவேண்டுமே யன்றிப் பரமபதியெனக் கோடல் உய்தியில் மகா பாதகமாகும். இது பற்றியே,

"பத்தில் வாறுவுமஞ்சேன் பொய்யர்த மெய்யுமஞ்சேன், கற்றையார் சடையெம்மன்னல் கண்ணுதற்றாதனன்றி, மற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டென நினைந்தெம்பெம்மாற், கற்றிலா தவரைக்கண்டா லம்மநாமஞ்சுமாறே".

என்று ஸ்ரீமத், மாணிக்கவாசகசுவாமிகளும்,

"ஒருவனை வித்தகனை மூவரிலொருத்தனென வோதியிடுமற்பமதியீர்." என்று சைவ[illegible]ப் பாவலரும், "மூவாமுதலா முதல்வ[illegible]யு மூவரிற் சாவார் பிறப்பார்கட[illegible]ங்களையுந் தகவாகவொக்கநினைவாருக்கல்லவோ வோரோ[illegible]க்க நரகம் விதித்தநூறாண்" என்று சைவ[illegible]ட்டையருங் கூறியிருக்கின்றார்கள். அந்த[illegible] விஷ்ணுமூர்த்தி பத்தவதாரங்களினும் சிவ[illegible]பெருமானைப் பூசித்தமையானும், பிரம இந்திரன் அக்கினி யமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் முதலியோர் வழிபட்டுப் பேறுகளடைந்தமையானும், கலங்காத சிந்தையுடைய வீரரின் உயிரையுங் கவர்ந்து செல்லுங் காலன்றனுயிரைக் கவர்ந்தமையானும், எத்தகையோரையும் மத்தேறி உடைதயிர்போற் பெண் மயக்கத்தாற் பித்தேறச்செய்யுஞ் சித்தசனை நெற்றிநாட்டத்தாலட்டமையானும், சகல லோகங்களையும் வருத்திய தாரகாட்சன்முதலிய முப்புராதியரை மந்தகாசத்தால் தகித்தமையானும், சதுர்முகன் தனயனாகிய தக்கனுலியற்றப்பட்ட தகுதியற்ற வேள்வியை வீரபத்திரரால் தடித்தமையானும், விழியிடந்தருச்சித்த விஷ்ணுமூர்த்திக்குச் சக்கரப்படையைத் தந்தமையானும், அரி அயனிருவரும் அடிமுடி யறியாவண்ணம் அழற் பிழம்பாய் நின்றமையானும், அனவற்ற பிரமவிஷ்ணுக்களின் சிரங்களை மாலையாக வாருவி லணிந்தமையானும், பாற்சமுத்திரத் தெழுந்த ஆலாகல விடத்தை யருந்தி யலர்க்கிறுத்தி முதலிய வானவர் மகளிர்கட்கு மங்கிலியப் பிச்சை யீந்தமையானும், ஆதிவிஷ்ணு மூர்த்திகொண்ட சுவேத வராகத்தின் கோட்டையும், ஆதிகூர்மத்தின் ஓட்டையும் பறித்தமையானும், நாராயணமூர்த்தி கொண்ட மச்ச அவதாரத்தின் கண்ணைச் சூன்றமையானும், இரணியனை வதைத்த உக்கிரநரசிங்கத்தின் உடம்பைச் சரபப்பட்சி வடிவங்கொண்டு கிழித்தமையானும், மகாபலிச் சக்கரவர்த்தியிடத்தில் மூவடிமண்வேண்ட விசுவரூபங்கொண்ட திருவிக்கிரமனுடைய முதுகெலும்பைப் பிடுங்கித் தண்டமாகக் கொண்டமையானும், பகீரதனுக்காக ஆகாய கங்கையைச் சடையிலேற்றுப் பாரமீது செல்லவிட்டமையானும், க்ஷேத்திரபாலன் கிள்ளிய சிரசைப் பிரமதேவர் இன்னுஞ் சிருட்டிக்க முடியாமல் வறிதே கிடப்பதினானும், விஷ்ணுமூர்த்தி தனது மைந்தர்களாகிய பிரமாவுக்கும் மன்மதனுக்கும் சிவபிரானாற் கிடைத்த தண்டனையை விலக்கி இரட்சிக்க முடியாமல் வாளாவிருந்தமையானும், திரிபுரசம்மாரத்தில் தாமோதரன் இடபமாய்த் தாங்கினமையானும், சாம்பவியைத் தணந்து தக்ஷிணாமூர்த்தி வடிவங்கொண்டு கல்லாலவிருட்சத்தின் கீழிருந்து சனகர்முதலிய நான்கிருடிகளுக்கும் சின்முத்திரைகாட்டி ஞானோபதேசஞ்செய்த காலத்தில் திரிலோகங்களினும் வைகிய சீவராசிகளனைத்தும் காம இச்சையை நீங்கியிருந்தமையானும், உமையம்மையாரால் கண்புதைக்கப்பட்ட ஞான்று உலகனைத்தும் அந்தகாரத்திலமிழ்ந்தினமையானும், மூவுலகங்களையுஞ் ஜயித்த விஜயத்துவசம் நாட்டிய தசக்கிரீவனை கால்விரல்நுதியான் அடர்த்தமையானும், பார்த்தனுடைய வில்லடியும் பாண்டியனுடைய பிரம்படியும் பாரதியண்டங்களில் வைகிய பல்லுயிர்கட்கும் பட்டமையானும், தேவதேவன் மகாதேவன் என்னுந் திருநாமங்களை யுடைமையானும், இன்னும் விரிவஞ்சிவிடப்பட்ட இவைபோன்றபல ஏதுக்களானும் முழுமுதற்கடவுள் சிவபெருமானே யென்பது வெள்ளிடைவிலங்கலேபோலத் தெள்ளிதிற் றுணியப்படும்.

சகோதர சகோதரிகளே! இங்ஙனம் தமக்கு ஒப்பாரும் மிக்காருமற்ற சிவபெருமானுக்கு வழித்தொண்டர்களின் மரபிலே நீங்கள்வந்து பிறந்தும், சக்கிரவர்த்தியின் தனயன், தரித்திரன் ஒருவனைத் தாதையென்றெண்ணிச் சகத்துளோர் இகழத் தடுமாறியதுபோல, பெண்ணாசையானும், பொருளாசையானும், புறச்சமயப் படுகுழியில் வீழ்ந்தும், காடன் மாடன் கறுப்பன் முதலிய துஷ்ட தெய்வங்களை வழிபட்டும், மாதாகோயிலுக்கு நேர்த்தி செலுத்தியும், நாகூர் மீராசாமிக்குக் காணிக்கை செலுத்தியும் சிவத்துரோகிகளாகி எரிவாய் நிரயத்திற்கு ஆளாகாதீர்கள். அப்பெருமான் தாயையிழந்த பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டினமையானும், மகளுடைய பிரசவ வீட்டில் தாய்போல் வந்துபகரித்தமையானும், மாமனாகிவந்து வழக்குரைத்தமையானும், பிட்டுவாணிச்சிக்காக மண்சுமந்தமையானும், மகாபாதகத்தைச் செய்து பிரமகத்தி தொடரப் பீடழிந்தலைந்த விப்பிரனைப் புரந்தமையானும், அடியார்க்கெளியன் சிற்றம்பலவனென்று தன்னைக் கூறியமையானும், சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தூது சென்றமையானும், கருணாகரன், சங்கரன், பக்தவற்சலன், பராபரயாளன், சுகவாரிதி, கருணைக்கடல் முதலிய திருநாமங்களை யுடைமையானும், அடியார்களை யிரட்சிப்பதில் அவருக்கு மேலான கடவுளரில்லை யென்பது தேற்றம். அவரிடத்திலே, ஒருவர் செய்த பாவத்துக்காக எழு தலைமுறைவரை பழிவாங்குதல், எரிச்சற்குணம், அவரவர்செய்த பாவத்துக்குத்தக்க நிரயத்தைக்கொடுத்து அநுபவித்துத் தொலைத்த பின்னர் முத்தியிற் செலுத்துவதன்றி, நித்திய நரகத்திலிட்டு வருத்துதல் முதலிய வன்கண்மையான குணங்கள் சிறிதுஞ் சமூகங் கிடைக்கமாட்டா. ஆதலால் அன்பர்களே! பசுவின் வாலை விட்டு எருமையின் வாலைப் பற்றிப் பௌவத்திலாழ்ந்தவனைப்போலவும், அக்கினி சாட்சியாக மங்கிலியந் தரித்த நாயகனைக் கைவிட்டு அன்னிய புருஷனைப் பின்பற்றிய அரிவையைப்போலவும், கையிலிருக்குங் கனகங்களைக் கவிழ்த்துவிட்டுக் காணலைச்சலமெனக் கருதி யலைந்த வெயவனைப் போலவும், புறமதத்தர் கூறும் பொய்யுரையிற் சிக்கி அலைக்கழிவுறாது, எமது சமய நூலாகிய சித்தாந்த சாத்திரங்களை நல்லாசிரியன் மாட்டு ஐயந்திரிபறக் கற்று அதின்வழியொழுகிச் சிற்சபேசனது திருவடி நீழலை அடையக்கடவீர்கள்.

ச. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணை-நகர்.

### ஸ்ரீ. ராமநாதவித்தியாலயம்.

சென்னையாத்திலே ஸ்ரீ. ராமநாதவித்தியாலயம் என்னும் மகுடவுரையுடனும் தமிழ்மகன் என்னும் கையொப்பத்துடனும் இப்பத்திரிகையில் வெளியான கடிதத்தை வாசித்தோம். கௌரவ ஸ்ரீ. பொ. இராமநாதனவர்கள் சைவசமயப் பெண்பிள்ளைகளின் நன்மையைக்குறித்து இவ் வித்தியாலயத்தை இயற்றினார் என்பதும், வித்தியாலயமோ கல்வி ஒழுக்கங்கள் குறைவறப்பயிலும் வசதிகளை உடைத்தாயிருத்தலால் சைவசமயப் பெற்றோர்கள் யாவரும் தங்கள் பெண்பிள்ளைகளை அனுப்பிக் கல்விகற்பிக்கத் தகுந்த ஸ்தானமென்பதும்யாவரும் அறிந்த விஷயமே. இராமநாதவித்தியாலயத்தில் செலவதிகமென்று அனேக பெற்றோர்கள் தங்கள் பெண்மக்களைக் கிறிஸ்தவித்தியாலயங்களுக்கு அனுப்பிக் கல்வி கற்கப்பண்ணுகிறார்கள். இப்பெற்றோர்கள் அற்பலாபத்தைக்குறித்து இவ்விதம் செய்கிறார்கள் என்பது சிறிதும் பொருந்தாது. ஏனெனில் இராமநாதவித்தியாலயத்திலும் பார்க்கக்கிறிஸ்தவித்தியாலயங்களில் செலவு மிகவுங் குறைவாயிருத்தலால் இது அற்பலாபமல்ல. பெற்றோர்கள் தங்கள் வரவுக்கேற்ற செலவைக்கருதவேண்டுமே யன்றி இராமநாதவித்தியாலயத்தில் தங்கள் வரவின் ஓர் பெரிய பாகத்தைச் செலவிட்டால், அவர்கள் கஷ்டத்திற்கு இடமாவார்களன்றோ. இது பெற்றோர்களுடைய குற்றமன்று.

பொதுநன்மையைக்கருதும் கௌரவ. ஸ்ரீ. பொ. இராமநாதனவர்கள் வறியபிள்ளைகளினுடைய நன்மையைக் கருதல்மிகவும் விசேடித்ததல்லவா. தற்போதுபணமுள்ளவர்களுடைய பிள்ளைகளைத்தவிர மற்றப்பிள்ளைகள் இராமநாதவித்தியாலயத்தின் நன்மைகளைக் கிரகிக்கமாட்டாதவர்களாயிருக்கிறார்கள். இதைக் கௌரவ. ஸ்ரீ. பொ. இராமநாதனவர்கள் உற்று யோசித்து சிறிது வறிய பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகளை இராமநாதவித்தியாலயத்துக்கனுப்பிக் கல்விகற்பிக்க உதவி புரிவார் என்பது எமது நம்பிக்கை. ஓர் தொகைப்பணத்தை வித்தியாலயத்துக்கெனவே தத்தஞ்செய்து அதன் வருமானத்தால் கல்விச்செலவைக் குறைத்தல் கௌரவ இராமநாதனவர்கள் எளிதில் செய்யத்தக்கது.

2-1-1921 க. பொன்னம்பலம்,
கொழும்பு.

### வடமாகாணப் பிரதிநிதித் தெரிவு.

இந்த மாதம் ஐந்தாந்திகதி காரைநகரில் அமரிக்கன் மிசியோன் பாடசாலையில், யாழ்ப்பாணக் கல்லூரிப் பண்டிதர், ஆலென் எபிரகாம். பீ. ஏ. எவ். ஆர். ஏ. எஸ். என்பவரின் அக்கிராசனத்தின் கீழ் தெரிவு செய்பவர்களின் ஓர் மகா சபை கூட்டப்பட்டது. அதில் அநேகர் விஷயஞ்செய்தார்கள் அக்கிராசனர் ஸ்ரீ. அத்துவக்காத் துரைச்சாமி அவர்களைச் சபையோர்க்கு நன்கு தெரியப்படுத்தியபின் அத்துவக்காத அவர்கள் "எங்கள் தற்கால குறைகள்" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு ஓர் அரிய உபந்நியாசத்தை மிக வாக்கு வல்லபமாய்ப் பேசியதோடு இவ் விலங்கைத்தீவின் அரசியலுக்காகச் செய்யவேண்டிய அநேக திருத்தங்களையும் பிரதானமாய் பொதுஜனங்களின் அபிப்பிராயம் அரசியல் முறையால் விசேஷமாய்க் கவனிப்பதற்கான திருத்தங்களும் இன்னும் இராச மகாசபையில் இலங்கை அரசியல் திருத்தமெனக் கொள்ளப்பட்ட பிரமாணத்தில் செய்யவேண்டிய திருத்தங்களும் அரசிறை வரும்படியால் பெரும்பாகத்தைக் கைத்தொழில், படிப்பு, கமச்செய்கையிலும், சுகாதாரத்தைப் பேணுவதிலும் செலவு செய்யப்பட வேண்டுமென்றும் தீர்க்கமாய்க் கூறினர். பின். அக்கிராசனர் எழுந்து பிரதிநிதியாய் தெரிவுசெய்யப்படுபவர் நன்கு கற்றவரும் பேசும் வல்லமையுடையவரும் நேர்மையும், கலங்காச்சுயேச்சை யுடையவருமாயிருத்தல் வேண்டும். என்றும், அவைகள் யாவும் அத்துவக்காத்தவர்களில் பூரணமாய்க் காணப்படுவதற்கு, அவர் உத்தியோகத்தில் பெற்றபுகழும், அவரது பொது ஜன அநுதாபமுமே, நற்சாட்சியென்றும் கூறினர். ஆகையால் ஸ்ரீ. துரைச்சாமியவர்களே வடமாகாணப்பிரதிநிதியாகத் தெரிவதற்குத் தகுந்தவர் என ஸ்ரீ. பிறக்டர் ஆறுமுகம் அவர்களால் கொண்டுவந்த பிரேரபணையை அநுவதித்து ஸ்ரீ. அத்துவக்காத் சுப்பிரமணியமும் மெஸ். ஏ. வி. குலசிங்கம் பிறக்றரும் உதயதாரகைப் பத்திராதிபரும் யாழ்ப்பாணக் கல்லூரி பிரதம உபாத்தியாயர் வே. வீ. செல்லையா அவர்களும் பிரசித்த நொத்தாரிஸ் தில்லையம்பலமவர்களும் எஸ். வேலுப்பிள்ளை அவர்களும் எஸ். ஏ. நாதனவர்களும் வர்த்தகர் எம். எஸ். வேலுப்பிள்ளை அவர்களும் பேசினர் சபையோர் சரகோஷத்துடன் தீர்மானத்தை ஏற்றனர். கூட்டம் அக்கிராசனருக்கு உபசரணையளித்து முடிவெய்தியது. கடித.

### புங்குடுதீவுத் தவறணைகள் நீக்கம்.

இத் தீவின் தவறுகட்செல்லாத் தானே யாகியவைகட் கணைதுணைகளாயிருந்த கட்குதவளிரண்டையும் நீக்க விரும்பிய இத் தீவின் தேசாபிமானப் பிரபுக்கள்பலரொருங்கு குழுமி மதுவிலக்குச் சங்கத்தை யேற்படுத்தியதன்வாயிலாகப் பிரசாரணங்கள் செய்ததனாலும், சங்கத்தவரின் வேண்டுகோளின்படி இச் சங்ககாரியதரிசியும், யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியருமாகிய மெஸ். ஜே. சி. அமரசிங்கம் B. A. அவர்கள், அக்கல்லூரியிலாசிரியரும் வானசாஸ்திர பண்டிதருமாகிய மெஸ். அலின் ஆபிரகாம் B. A. F. R. A. S. அவர்களை வரவழைப்பித்துச்செய்வித்த அரிய பெரிய உபந்நியாசத்தாலும், இத் தீவினர் மனக்கிளர்ச்சியெய்தப்பெற்று இத் தவறணைகளை நீக்கும்படி நூற்றுக்கு இருபத்தைந்து விகிதமானோர் தலைமைச்சாத்திட்டசாட்சியார்க்கோர் மனுப்பத்திரமனுப்பினர்.

அரசினர் அம்மனுப்பத்திரத்திற்கு மறுமொழியாக இம்மதி 5-ம 6-ம் திகதிகளில் வாக்காளர்களின் (Vote) சம்மதி யெடுக்கப்படுமென வறிவித்திருந்தனர். அத் தினங்களில் வடமாகாண உப ஏஜென்தவர்களிவ்விடம் வந்து 5-ம் உ புங்குடுதீவு மேற்குத் தவறணைக்குரிய சம்மதியை இப்பகுதி Stotin Mission பாடசாலையிலும், கிழக்கிலுள்ள தவறணையை நீக்குவதற் குரிய சம்மதியை 6-ம் உ அப்பகுதி "கணேசவித்தியாசாலை" யிலும் எடுத்தனர் அத்தருணங்களில் 100 க்கு 75 விகிதத்துக்கு மேற்பட்டோர் சம்மதி கொடுத்தனர். இச்சம்மதி கொடுத்தோருள் ஒருவராயினும் தங்கட்குத் தவறணைகள் வேண்டுமென்பதாகச் சம்மதிகொடுத்திலரென்றும், அது மிக வியக்கற்பாலதாகிய வொன்றென்றும், வரும் ஆடிமாதம் 1-ம் திகதி தொடக்கம் இனிமேல் இவ்வூரில் கள்ளுத்தவறணைகளிருக்கமாட்டாவென்றும உப ஏஜன்தரவர்கள் சொல்லினர்.

இக் கள்ளுத் தவறணைகளை நீக்குவதற்காகத் தங்கள் சிரமத்தைப் பாராட்டாது அரிய பிரயாசையெடுத்த மதுவிலக்குச் சங்கத்தலைவர் கனம் R. P. Brayant போதகர் அவர்களுக்கும் இச்சங்க பொக்கிஷாதிபதி ஸ்ரீ வே. சிவப்பிரகாசம் பிரசித்த நொத்தாரிஸ் அவர்களுக்கும், இச்சங்க காரியதரிசி ஸ்ரீ J. C. அமரசிங்கம் B. A. ஆசிரியரவர்கட்கும், இன்னுமிதற்காக அரும் பிரயாசையெடுத்த மற்றும் பரோபகாரப் பிரபுக்கட்கும் இவ்வூரவர்கள் மிக்க நன்றியறிதலும் கடப்பாடுமுடையராயிருக்கின்றனர். பரோபகாரி..

## அநுவாதம்.

### வேளாளரும் உபாத்தியாயரும்.

வேளாளன், உபாத்தியாயர் இவ்விருவர் இல்லாவிடில் உலகமே அஸ்தமித்துவிடும் என்றார் ஞானியொருவர். வேளாளன் வெயில், மழை கவனியாது உழைப்பதாற்றான் நாம் சுகமாய் உட்கார்ந்துகொண்டு போஜனம் செய்துவருகிறோம். அவன் இல்லாவிடில் நம் கதியென்னவோ? ஆனால் அவன் நமது ஸ்தூல சரீரத்தை மாத்திரமே பசியால் வருந்தாது காப்பாற்றிவருகிறான். நாம் வேளை தவறாது சாப்பிட்டுக்கொண்டு முண்டம்போல் உட்கார்ந்திருந்தால் நமக்கும் யதேச்சையாய்த் திரியும் மிருகங்களுக்கும் என்ன வித்தியாசம்? கடவுள் நமக்கு அறிவைக்கொடுத்ததின் பிரயோசனம் என்ன? இவ்வுடலைப் போஷிப்பதுடன் கூடவே, வித்தை கற்பிக்கவும், ஞானபோதனை செய்யவும் நாளடைவே ஆத்ம சுத்தியுண்டாகுவதற்குமே உபாத்தியாயர்கள் ஏற்பட்டுள்ளனர்.

நமக்குப்போஜனம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கல்வி. இக்கல்வியைக் கற்பிக்கவே உபாத்தியாயர்கள் இருக்கின்றார்கள் என்றோம். சிறுவயதிலேயே நம்மனதை நன்மார்க்கத்தில் செலுத்தி, நம்மைத் தேசாபிமானிகளாகவும், பரோபகாரிகளாகவும், கற்றோர்களாகவும், செய்வது அவர்கள் கடமை. உபாத்தியாயர் வேலை அங்கீகரிக்குமுன் சிற்சில விஷயங்களைப் பற்றித்தீர்க்காலோசனை செய்வது நலம். அவையாவன: சிறுபிள்ளைகளிடம் தனக்கு அன்பு உண்டா, அல்லது ஏதோ பஞ்சகாலத்தில் முப்பது ரூபாய் சம்பளந் தருகின்றார்களேயென்ற கருத்துடன் வேலையில் அமர்கின்றார்களா. இவ்வேலை தம்மனதிற்குப் பூரணமாகப் பிடித்திருக்கிறதா பிள்ளைகளுக்குப் பாடத்தில் பிரியமுண்டாகும்படி கற்பிக்கச் சக்தியுண்டா. இதேபடு கூட, அமரும் உபாத்தியாயர் குணசாலியா அயோக்கியரா என்பதையும் பள்ளிக்கூடத் தலைவர் அவசியம் அறியவேண்டும்.

சிலர் சொல்லலாம், "ஐயா, ஒரு உபாத்தியாயர் யோக்கியராகவும், கற்றவராகவும், சாமர்த்தியசாலியாயும், அன்புவாய்ந்தவராயும் இருக்கவேண்டும் என்கிறீர். இவ்வளவு அரியகுணங்களும் பொருந்திய ஒரு மகானுக்கு என்ன சம்பளங் கொடுக்கப்போகிறீர். முப்பது ரூபாயோ, நாற்பதுரூபாயோ! வெற்றிலைபாக்குக் கடைவைத்தோ, அல்லது கொத்து வேலை செய்தோ இதற்குமேலே சம்பாதிக்கலாமே, ஐயா! அதுவும் உண்மையே!

மானிடஜாதிக்கே இவ்வளவு உபகாரமாயுள்ளவர்க்கு நாம் நன்றியுடையவர்களா யிருக்கவேண்டாமா. அவர்களுக்குண்டான மரியாதையைச் செலுத்தவேண்டாமா. ஒரு கீழ்வகுப்பு உபாத்தியாயரை உதாரணமாகக் கொள்வோம். சுமார் முப்பதுரூபா சம்பாதிக்கிறார். (அதற்கும் குறைந்த சம்பளக்காரர்களும் உண்டு.) இவர் தற்கால முறைப்படி தினசரி நடக்கும் பாடசம்பந்தமாய் முன்னேயேபடித்து முக்கியவிஷயங்களைக்குறித்துக்கொண்டுபோகவேண்டியதாகவிருக்கின்றது. இதிலேயே ஒன்றரை அல்லது இரண்டுமணி நேரம் கழிந்துபோகிறது. வீட்டுவேலை எவ்வளவோ இருக்கும்; அதையும் கவனித்துக்கொள்ளவேண்டும். இவ்வளவுக்கு மேல் சில பிள்ளைகளுக்கு வீட்டுப்பாடம் சொல்லித்தருகிறார்கள். கோடியிருந்து, கிராமத்திருந்து, சிரத்தையும் இருந்தாலும், இதனால் ஒருவர் எவ்வளவுதான் சம்பாதிக்கக்கூடும். இவ்வாறே இருபத்துநான்கு மணி நேரமும் சென்றுவிடுகிறது. மேலும் மேலும் கற்க ஆவல் கொண்டிருக்கும் ஓர் உபாத்தியாயருக்கு பல சந்தர்ப்பங்களிலும் அது அசாத்தியமாகிவிடுகிறது. எனி, தோனி, உபாத்தியாயர் ஒரே வகையென்பர். கீழ்வகுப்போரையெல்லாம் மேல்வகுப்புக்கு அனுப்புகிறார். தான்மட்டும் கதிகலமோக்ஷமற்று, வித்தையிலும் பதவியிலும் விருத்தியில்லாது இருந்த இடம் பன்னம் என்றபடி, வேர்ஊன்றிய பர்வசமரம்போல் ஸ்திரமாய் ஸ்தாபித்துப் போய்விடுகிறார். என்ன பரிதாபம்! வாழ்நாள் முழுதும் சிறுவருக்குக் கூட்டல் கழித்தல் சொல்லிக்கொடுப்பதற்காகத்தானா இவர்கள் உலகத்தில் பிறந்திருக்கிறார்கள். இவர்கள் மேலும் மேலும் கற்கவேண்டியது ஒன்றும் இல்லையா. தேகசுகமில்லை, மனோசுகமில்லை. எங்கே பார்த்தாலும் சீர்திருத்தங்கள் நடக்கின்றன. நமதுநாட்டில் இதுசம்பந்தமாய் உழைக்கக்கூடியவர்கள் எவரும் இல்லையோ. சமரச போதினி.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

☞ Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saivaprakasa Press, Jaffna.